Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 17 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 3 (02.07.2003) புதன்கிழமை இதழ்: 273

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து

SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.

ரா ம் கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — சீமேந்து — ரா ம் கோ

(சி-1147)

# கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நேரடி ரயில்சேவை ஆரம்பம்!

கொழும்பிற்கும் மட்டக்களப்பிற்கும் இடையிலான நேரடி ரயில் சேவை, நேற்றுமுதல் மீண்டும் ஆரம்பமாகியது. கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து நேற்றுக் காலை 8.30 மணிக்கு புறப்பட்ட புகையிரதம் மட்டக்களப்பை மாலை 5.30 மணிக்கு வந்தடைந்தது. மீண்டும் மட்டக் களப்பிலிருந்து மாலை 6.00 மணிக்கு கொழும்பு நோக்கி அதே ரயில் புறப்பட்டது.

கொழும்புக்கும் வாழைச்சேனைக்கும் இடையிலான புகையிரத சேவை - இதுவரை காலமும் திருமலையிலிருந்து கொழும்புக்குச் சென்றுவரும் ரயிலுக்கான இணைப்புச் சேவையாகவே மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதனால்- கல்லோயா சந்தியிலும், மாகோ சந்தியிலும் தாமதித்து நிற்கவேண்டியிருந்ததால், பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கவேண்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.




# கொழும்பில் நேற்றிரவு மீண்டும் சுற்றிவளைப்பு!

## 27 பேர் விசாரணைகளுக்காக தடுத்துவைப்பு

(கொழும்பு)

கொழும்பில் நேற்றும் இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து பெருமெடுப்பிலான தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

ஜிந்துப்பிட்டி, கன்னாரத்தெரு, செக்கடித் தெரு, ஆட்டுப்பட்டித் தெரு மற்றும் கோட்டை ஆகிய பகுதிகளில் - பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து மேற்படி தேடுதல் நடவடிக்கையை நடத்தியுள்ளனர்.

நேற்றிரவு 8 மணி முதல் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி தேடுதல் நடவடிக்கை, நள்ளிரவுவரை தொடர்ந்தது.

இத்தேடுதலின் போது - சுமார் எழுநூறுக்கும் மேற்பட்டவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். இவர்களில் 27 பேர், மேலதிக விசாரணைகளுக்காகப் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் அனைவரும் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (200)

# பிந்துனுவெவ படுகொலை; ஐவருக்கு மரணதண்டனை!

## புளொட் அலுவலகம் மீது திருமலையில் குண்டுவீச்சு!

திருமலை நகரின் மின்சாரநிலைய வீதியிலுள்ள - புளொட் அலுவலகம் மீது, நேற்றிரவு 8.30 மணியளவில் கைக்குண்டு ஒன்று வீசப்பட்டது. இச்சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து - இப்பகுதியில், நேற்றிரவு படையினரும், பொலிஸாரும் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர். கைக்குண்டுவீச்சை மேற்கொண்டவர்கள் தொழில்நுட்பக் கல்லூரிப் பக்கமாக ஓடிச்சென்றதைக் கண்டதாகப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## குற்றவாளிகளில் இரு பொலிஸாரும் அடக்கம்

(கொழும்பு)

**பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் 27 பேரின் படுகொலை தொடர்பாக நடத்தப்பட்டுவந்த வழக்கில் - 2 பொலிஸார் உட்பட 5 பேருக்கு, கொழும்பு மேல் நீதிமன்றினால் மரணதண்டனைத் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.**



பிந்துனுவெவவில் படுகொலை செய்யப்பட்ட ஒருவரின் சடலம் மீது கதறியழும் உறவுகள்.

பண்டாரவளை - பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலை வழக்கில் - எதிரிகளான 5 பேருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது. இரண்டு பொலிஸ் அதிகாரிகளுக்கும், மூன்று கிராம வாசிகளுக்குமே மரணதண்டனை விதிக்கப்பட்டது.

2000 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25 ஆம் திகதி, பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் தாக்கப்பட்டதில் அங்கிருந்த 27 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டதுடன், 14 இளைஞர்கள் படுகாயமடைந்தமையும் தெரிந்ததே.

இச்சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி சரத் அம்பேபிட்டிய தலைமையில்- நீதிபதிகளான எரிக் பஸநாயக்க, உபாலி அபயரட்ண ஆகிய மூவர் முன்னிலையில்- ட்ரயல் அட்பார் (10 ஆம் பக்கம் பார்க்க)



பிந்துனுவெவ படுகொலை வழக்கில்- மரணதண்டனை விதிக்கப்பட்ட பண்டாரவளைப் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் சேன கஜம்பதி கருணாசேன, தியத்தலாவை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ரீரோன் வஜிர ரட்ணாயக்க ஆகியோர், நீதிமன்றத்திலிருந்து சிறைக்கு - சிறைக்காவலர்களால் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

# ஐ.நா.அமைதிகாப்புப் பயிற்சி கொழும்பில் இன்று ஆரம்பம்

ஐ.நா.அமைதிகாப்புப் பணிக்கான பயிற்சி நெறி ஒன்று, இன்று கொழும்பில் ஆரம்பித்து வைக்கப்படவிருக்கிறது. இதில் 18 ஆசிய நாடுகள் பங்கேற்கின்றன. இரண்டு வாரகாலப் பயிற்சியின்போது - அமைதிகாப்புப் பணி குறித்த அனுபவப் பகிர்வுகள், சமாதானப் பணி குறித்த அனுபவம் கொண்ட நாடுகளிடையே மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பயிற்சிநெறி மூலம் - இலங்கை இராணுவம் - வெளிநாடுகளில் அமைதிகாப்பு முயற்சிகளை மேற்கொள்ள ஏதுவாக - விசேட பயிற்சி மையத்துக்குத் தேவையான உதவிகள் ஐ.நா.மூலம் கிடைக்கவுள்ளது.

நாட்டில் அமைதி நிரந்தரமானால் - இலங்கை, தனது படையினரை ஐ.நா. அமைதிகாப்புப் பணியில இணைக்க, ஐ.நா. அமைதிகாப்புத் திணைக்களத்தை நாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Expo Aviation (Pvt) Ltd.

EXPO Aviation

பயணிகள் அதிகரிப்புக் காரணமாக எமது நிறுவனத்தில் இன்றுமுதல் எதிர்வரும் 8 ஆம் திகதிவரை மேலதிக விமானசேவைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

தொடர்புகளுக்கு

021 - 222 3891, 071 - 234 8888, 071 - 2349999

(சி-1139)

# பாலராவை சந்திக்க தமிழ்செல்வன் விரைவில் லண்டனுக்குப் பயணம்?

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்வதற்காகவும், விடுதலைப் புலிகளால் ஏற்றுக்கொள்ளக்கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புப் பற்றிய மேலதிக ஆலோசனைகளுக்குமாக விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் லண்டன் செல்லலாம் என கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனாலும், புலிகள் தரப்பினால் இச்செய்தி உறுதிப்படுத்தப்படவில்லை.

இதுதொடர்பாக குறிப்பிட்ட இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில் -

லண்டனில் தங்கியிருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கனடியத் தூதுவர் நாளை கிளிநொச்சிக்கு!

இலங்கைக்கான கனடா நாட்டின் தூதுவர் - வலேரி ரேமன்ட், நாளை கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கிளிநொச்சியில் - இவர் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

சமாதானப் பேச்சு முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்தும், ரோக்கியோ மாநாட்டில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்தும், இச்சந்திப்பின்போது கலந்தாலோசிக்கப்படவிருக்கிறது. (க)

# இடைக்கால நிர்வாக வரைபு அடுத்தவாரம் புலிகளிடம்!

வட - கிழக்கில் அமைக்கப்படவிருக்கும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்த வரைபொன்றைத் தயாரிக்கும் வேலைகளை அரசு பூர்த்திசெய்துள்ளது.

இவ்வரைபு- விடுதலைப் புலிகளின் பரிசீலனைக்காக அநேகமாக அடுத்த வாரமளவில் கிளிநொச்சியில் உள்ள புலிகளின் தலைமையகத்துக்கு அனுப்பிவைக்கப்படலாமென - அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேணாட் குணதிலக தெரிவித்தார். (200)

## குடாநாட்டிலுள்ள உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக
# மனிதஉரிமைகள் ஆணைக்குழு முன்
# இராணுவத் தளபதி மீது விசாரணை!

உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக - மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலக அதிகாரிகள், இராணுவத் தளபதி லயனல் பலேகல்லவைக் கொழும்பில் வைத்து விசாரித்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாகப் பல பொதுமக்கள் முறையிட்டதன் அடிப்படையில் - மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலக இணைப்பாளர், யாழ் மாவட்ட இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிடம் இது தொடர்பான விளக்கத்தைக் கோரியிருந்தார்.

அதற்கமைய யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி - இது தொடர்பான அறிக்கையொன்றினைச் சமர்ப்பித்திருந்தார். அந்த அறிக்கையை, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திற்கு, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ருவான சந்திரசேகர அனுப்பிவைத்திருந்தார்.

அந்த அறிக்கையில், மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்தான் உயர் பாதுகாப்பு வலயம் உள்ளதென குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பூரண விபரங்களை பெறும் பொருட்டே இராணுவத் தளபதி- கொழும்பிலுள்ள மனித உரிமைகள் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டிருந்ததாகத் தெரியவருகின்றது.

இந்தச் சந்திப்பின்போது - உயர் பாதுகாப்பு வலயங்கள், சட்டரீதியாகச் செல்லுபடியற்றவை என, மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டதாகவும் தெரியவருகிறது.

# தங்காலை கடலில் படகு கடற்படையிடம் சிக்கியது

சட்டவிரோத குடியேற்றக்காரர்களை ஏற்றிய - கப்பல் ஒன்றையும், படகு ஒன்றையும், கடற்படையினர் நேற்று அதிகாலை தங்காலையில் வைத்துக் கைப்பற்றியுள்ளனர்.

'இன்விசிடன்' என்ற கப்பலில் இருந்த - இலங்கையர் உட்பட 190 பேரைக் கைதுசெய்துள்ளதாக கடற்படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

கைப்பற்றிய இந்தக் கப்பலில் 29 பாகிஸ்தானியர்களும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கப்பல் தங்காலை குடாவெல்லப் பிரதேசத்தில் இருந்து, சுமார் 7 கடல்மைல் தூரத்தில் பயணித்துக்கொண்டிருந்தபோது, கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் தென்மாகாண கடற்படைத் தலைமையகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்களை இரகசியப் பொலிஸார் விசாரணை செய்யவுள்ளனர்.

### ஆயர் தினம் அனுஷ்டிப்பு

யாழ். ஆயர் - தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் பெயர் கொண்ட தினம், நாளை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனையொட்டி - யாழ். பேராலயத்தில் நாளை காலை 9 மணிக்கு, ஆயர் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இதில் யாழ். நகரத்தைச் சுற்றியுள்ள கிறிஸ்தவப் பாடசாலைகளின் மாணவர்கள் அனைவரும் பங்குபற்றுவார்கள்.

# வடமராட்சி கிழக்கின் கடற்கரை வீதி திருத்தம்

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள, மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையிலான கடற்கரை வீதி, 12 வருடங்களின் பின், கடந்த வாரம் முதல் செப்பனிடப்பட்டு வருகின்றது.

மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையான, 18 கிலோமீற்றர் நீளமான இவ்வீதியைப் புனரமைப்பதற்கு 'நிக்கொட்' நிறுவனமும், உலக உணவு ஸ்தாபனமும் நிதியுதவியை வழங்கியுள்ளன.

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர்- இவ்வீதியை செப்பனிடுவதற்கான பயிற்சிப்பட்டறைகள், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றன. இதன் அடிப்படையில் - வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும், வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழுவும் இணைந்து, புனரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன.

இப்பிரதேசத்தில் அமைந்துள்ள கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள், தமது பரப்பிற்குட்பட்ட பகுதியிலுள்ள வீதிகளைப் பொறுப்பெடுத்து புனரமைத்து வருகின்றன. மருதங்கேணி பிரதேசத்தில் மீளக் குடியேறியுள்ள மக்கள் பயன்படுத்தும் பிரதான வீதி இதுவாகும். (122)

### தேங்கிக் கிடக்கும் சீருடை முத்திரைகள்

பாடசாலை மாணவர்களின் - இலவச சீருடைத் துணிகளுக்கான முத்திரைகள், வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் தேங்கிக்கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின்போது, சீருடை முத்திரை வழங்குவதற்கான இறுதித் திகதி ஜூன் 20 என அறிவிக்கப்பட்டும் - வடமராட்சியிலுள்ள சகல பாடசாலைகளிலும் கல்வி கற்கும் மாணவர்களின் சீருடை முத்திரைகளே இவ்வாறு தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)

# மாகாணமட்ட மெய்வல்லுனர் போட்டிகள் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்!

## பெருந்தொகை வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்பு

வடக்கு - கிழக்கு மாகாண மட்ட மெய்வல்லுனர் போட்டிகள் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள்- எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் யாழ். மத்தியகல்லூரியில் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த பெருமளவிலான வீரர்களும், வீராங்கனைகளும் இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

அதேவேளை - ஓகஸ்ட் மாதமளவில் தேசிய விளையாட்டுவிழாவையும் பெருமெடுப்பில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடத்துவதற்கான பணிகள் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

# தருமபுரம் வைத்தியசாலை எதிர்நோக்கும் காணிப்பிரச்சினை

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தருமபுரம் வைத்தியசாலையின் வளர்ச்சிக்கு, காணி பற்றாக்குறையாக இருப்பது, பெரும் தடையாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வருடம் இவ்வைத்தியசாலைக்கு பிரேதஅறை கட்டுவதற்கு ஏழு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், பொருத்தமான காணி இல்லாததால், அந்த 7 இலட்சம் ரூபாவும் திரும்பிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை- இவ்வைத்தியசாலைக்கு சில ஏக்கர் காணி ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள போதும், அக்காணிகளை தனியார் அத்துமீறிப் பிடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வைத்தியசாலைக்கு - நோயாளர் விடுதிகள் கட்டுவதற்குப் பல நிறுவனங்கள் முன்வந்துள்ளபோதும், காணிப் பற்றாக்குறை காரணமாக அது சாத்தியப்படாமல் உள்ளது.

அதேவேளை - அண்மையில் யுனிசெப் நிறுவனத்தினால் இவ்வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி ஒன்றும் வழங்கப்பட்டது.

இவ்வைத்தியசாலையின் வளர்ச்சி கருதி - இவ்வைத்தியசாலைக்கு என, காணியைப் பெற்றுக்கொடுப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்யவேண்டும் என வைத்தியசாலை நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது. (122)

### சிறுப்பிட்டி சோதனைச்சாவடி அகற்றப்பட்டது!

(புத்தூர்)

சிறுப்பிட்டிப் பகுதியில் இடம்பெயர்வுக்குப் பின்னர் அமைக்கப்பட்டிருந்த படையினரின் சோதனைச்சாவடி, கடந்த வாரம் அகற்றப்பட்டதுடன் அதிலிருந்த படையினரும் வெளியேறியுள்ளனர். (110)

### கூடைப்பந்தாட்ட இறுதிச்சுற்று இன்று!

(ஈச்சமோட்டை)

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம், யாழ்.சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் நடாத்திய, விபுலானந்தர் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் இன்று பி.ப. 4.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த இறுதிப் போட்டியில்- ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்.பல்கலைக் கழக அணி மோதவுள்ளது. (58)


## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

புதிய Y@P Jack (NET 2 PHONE) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நடனமுருகன், ஏஜென்ஸி, இல.772, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தொ.பே. 222 5537, 222 5640. (சி-1146)

### விற்பனைக்கு

31/23, சபாபதி வீதி, வண்ணார் பண்ணை கிழக்கு, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தில் நான்கு பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. மேலேயுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும். (403)

### தேவை

20 - 50 வயதிற்குட்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை. அனுபவமுள்ளவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

கிராமசேவையாளர் நற்சாட்சிப் பத்திரம், கல்வித்தகைமை ஆவணங்களுடன் நேரில் வரவும்.

அனுபவத்திற்கேற்ப ஊதியம் வழங்கப்படும்.

நஷனல் பாதுகாப்புத்திட்டம், 181/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (404)


# பளைக் கோட்ட பாடசாலைகளின் தமிழ்த்தினப் போட்டி பெறுபேறுகள்!

(நேற்றைய தொடர்ச்சி)

**பேச்சு**

**பிரிவு - 2**

சி.விதர்ஷா (முகாவில் அ.த.க. பாடசாலை), இ.நிரூபி (பளை மத்திய கல்லூரி), த.ஐஸ்வர்யா (கோயில்வயல் சீ.சீ.த.க.பாடசாலை).

**பிரிவு - 3**

க.மைதிலி (பளை மத்திய கல்லூரி), நி.நிதர்சினி (மாசார் அ.த.க. பாடசாலை), க.அஜிந்தா (முகாவில் அ.த.க.பாடசாலை).

**பிரிவு - 4**

பே.ஜெயராசி (மாசார் அ.த.க. பாடசாலை), ச.பகீரதன் (வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பாடசாலை), பா.றபீக்கா (பளை மத்திய கல்லூரி).

**பிரிவு - 5**

பே.கல்யாணி (பளை மத்திய கல்லூரி),

**பாவோதல்**

**பிரிவு - 1**

பொ.கஜீபா (சோரன்பற்று சீ.சீ.த.க.பாடசாலை), கே.தமிழினி (பளை றோ.க.த.க.பாடசாலை).

**பிரிவு - 2**

தி.சுபாஜினி (பளை றோ.க.த.க. பாடசாலை), பா.பால்ராஜ் (இயக்கச்சி அ.த.க.பாடசாலை), த.செந்தில்மலர் (கோயில்வயல் சீ.சீ.த.க.பாடசாலை).

**பிரிவு - 3**

ம.ஜீவிதா (வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பாடசாலை), கு.குலராணி (சோரனபற்று கணேசா வித்தியாலயம்), வி.சுதர்சினி (மாசார் அ.த.க. பாடசாலை).

**பிரிவு - 4**

க.சசிகலா (பளை றோ.க.த.க. பாடசாலை).

**இசையும் அசைவும் (தனி)**

**பிரிவு - 1**

மேரி ஆன் சிந்துஜா (பளை மத்திய கல்லூரி), ஸ்.கசில்டா (பளை றோ.க.த.க. பாடசாலை), ப.சிவநிஷா (முகாவில் அ.த.க. பாடசாலை).

**இசை (தனி)**

**பிரிவு - 2**

சி.நிரோஜினி (பளை றோ.க.த.க. பாடசாலை), செ.சத்தியா (வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலை).

**பிரிவு - 3**

செ.கஸ்தூரி (பளை றோ.க.த.க. பாடசாலை), இ.லோசனா (வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலை), வ.கனகாம்பிகை (சோரன்பற்று கணேசா வித்தியாலயம்).

**பிரிவு - 4**

மு.சுஜீபா (வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பாடசாலை), ஜெ.மரிய மெற்றலி (பளை றோ.க.த.க. பாடசாலை).

**இசை - குழு**

வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலை, பளை றோ.க.த.க.பாடசாலை.

**நடனம் - குழு**

சோரன்பற்று கணேசா வித்தியாலயம்.

**இசை நாடகம்**

பளை றோ.க.த.க. பாடசாலை, பளை மத்திய கல்லூரி.

**சிந்து நடைக்கூத்து**

வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலை

**தமிழ் அறிவு வினாவிடைப் போட்டி**

பளை மத்திய கல்லூரி, வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பாடசாலை.

**தமிழ்மொழி வாழ்த்து**

பளை றோ.க.த.க.பாடசாலை, வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பாடசாலை, பளை மத்திய கல்லூரி.

**கொடி வணக்கப் பாடல்**

பளை றோ.க.த.க. பாடசாலை, பளை மத்திய கல்லூரி, வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலை.

**தமிழ்த்தாய் வாழ்த்து**

பளை றோ.க.த.க. பாடசாலை.

# எதிர்வரும் 25, 26, 27 ஆம் திகதிகளில் மாகாண தமிழ்த்தினப் போட்டிகள்!

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கிடையிலான, மாகாணமட்டத்திலான தமிழ்த் தினப்போட்டிகள், இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் - எதிர்வரும் 25, 26,27 ஆகிய மூன்று தினங்களிலும், தெரிவுசெய்யப்பட்ட யாழ்.நகரப் பாடசாலைகளில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இப்போட்டிகளை நடாத்துவதற்கு - திருகோணமலையிலிருந்து மாகாணக்கல்வி அமைச்சின் தமிழ்ப் பிரிவின் கல்வி அதிகாரிகள் இங்கு வரவுள்ளதாகவும் அவர் கூறினார்.


நிறைஞ்சனாஸ் சங்கானை

சத்தியராஜ், ரம்பா, மணிவண்ணன் கபாலி நடித்த

நிஸ்ரஹி

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
தினசரி இரவு. 8.45 (பு.நே)

THE BOUN IDENTITY

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சரத்குமார், மீனா, ரம்யா கிருஷ்ணன் நடித்த

கே.எஸ்.ரவிக்குமாரின்



10.30, 2.30, 6.30

## வேலை வாய்ப்பு

Computer Typist

மாதச்சம்பளம் திறமைக்கு ஏற்ப ரூபா 4000.00 இருந்து

நேர்முகத்தேர்வு

05-07-2003 சனி 9.00-12.00

நேரில் சான்றிதழுடன் வருக

சுந்தர் வெளியீடு

844, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(கோயில்வீதிச் சந்திக்கருகாமை)

## VACANCY

*Your Partner in IT Solutions*

We are looking for experienced and committed persons for the following positions:

1. **Hardware Technicians**
   *Salary range Rs. 10,000 upwards per month*
   *Accommodations will be provided*
2. **Account Clerk/ documentation Officer (Female)**
   *Attractive salary package.*

Please apply or e-mail your CV with contact telephone number within 7 days to:

Director,
STP Computer World (Pvt,.) Limited.
54A. Palaly Road, Jaffna.
T.P: 2222674
e.mail: stpedu@slt.lk

# கண்டி, மல்வத்தை மகாநாயக்கர்கள் பிரபாகரனைச் சந்திக்க விருப்பம்!

கண்டி அஸ்கிரிய பீடாதிபதியும், மல்வத்தை மகாநாயக்க தேரரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திக்க விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

அவர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்லத் தயாராகவுள்ளதாக, அமைச்சர் பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

மஸ்கெலியா சென்.ஜோசப் தமிழ் மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நூலகங்களுக்கான புத்தகங்களைக் கையளித்துப் பேசுகையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார். சமூக அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் சி.நவரட்ண தலைமையில் நடைபெற்ற வைபவத்தில், 12 பாடசாலைகளுக்குத் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதிவாய்ந்த நூல்கள் வழங்கப்பட்டன.

அமைச்சர் சந்திரசேகரன் தொடர்ந்து பேசுகையில், ஒரு சமூகத்தின் விழிப்புணர்வுக்குக் கல்வி அறிவு அவசியமாகும். வடக்கு-கிழக்கு மக்கள் கல்வியறிவில் சிறந்து விளங்கியதால்தான், தமது உரிமைகளுக்காகப் போராடி வருகின்றார்கள். மலையகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், சிறந்த கல்விமான்களை உருவாக்கவும் சமூக அபிவிருத்தி அமைச்சின்மூலம் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறோம்.

நாட்டில் இரண்டு தசாப்தங்களாக இடம்பெற்றுவந்த யுத்தத்தின் கோர விளைவுகளை - தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்கள் உணர்ந்துள்ளன. எனவே, சமாதானத்துக்கான குரல் ஓங்கி வருகின்றது என்றார்.

# இந்த முதற் காலாண்டுப் பகுதியில் திருப்தியான பொருளாதார வளர்ச்சி

## நிதி அமைச்சர் சொக்ஸி அறிவிப்பு



போர்நீங்கிய சமாதானச் சூழல் நிலவுவதால் - நாட்டின் பொருளாதார வளர்ச்சி - இந்த ஆண்டின் முதலாவது காலாண்டுப் பகுதியில் அதிகரிக்கும் போக்கை எட்டியிருப்பதாக, நிதி அமைச்சர் கே.என். சொக்ஸி தெரிவித்தார்.

இந்த ஆண்டுக்கான, ஆண்டு மத்தியின் நிதிநிலை அறிக்கையை வெளியிட்ட அவர் -

முதற் காலாண்டுப் பகுதியில்- நாடு 5.5 சதவீத பொருளாதார வளர்ச்சியைச் சந்தித்திருப்பதாகத் தெரிவித்தார்.

இது திருப்தியானதும் - ஊக்கமூட்டுவதுமான முன்னேற்றம் என அவர் விபரித்தார்.

இதேவேளை - தொழில்சார் உற்பத்தி 4.6 சதவீதத்தாலும், உல்லாசப் பயணத்துறை 28 சதவீதத்தாலும், ஏற்றுமதி - இறக்குமதி 13 சதவீதத்தாலும் அதிகரித்திருப்பதாகவும், அவர் மேலும் குறிப்பிட்டார்.

### கைதடிப் பாலத்தருகே புதிய சோதனைச் சாவடி

(கைதடி)

கைதடிப் பாலத்துக்கு அருகில், வீதியின் குறுக்கே படையினர் முட்கம்பி வேலிகளை அமைத்து, அவ்வீதியால் செல்வோரைப் பரிசோதித்து வருகின்றனர்.

நேற்றுக்காலை முதல் இவ்வாறு கைதடிப் பாலத்துக்கு அருகே முட்கம்பியிலான தடைகளைப் போட்டு, யாழ்ப்பாணத்திலிருந்து கைதடியூடாக மோட்டார் சைக்கிள்களில் செல்வோரை மறித்து, அவர்களின் அடையாள அட்டைகளைப் பரிசோதிப்பதுடன், அவர்களை விசாரணைக்குட்படுத்துகின்றனர்.

# நாடும் நடப்பும்




அமைதிக்கு விரோதமான சக்திகள்.

# புலிகள் பற்றி மதன்குமார் கொடுத்த தகவல்கள் போலி!

## தாப்ரூ விசாரணையில் தெரிந்ததாம்

தெஹிவளை பொலிஸ் புலனாய்வுத்துறை அதிகாரி சுனில் தாப்ரூ கொலைச் சந்தேகநபர் மதன்குமார் என்பவர், கொழும்புக்கு வந்துள்ள- விடுதலைப் புலிகள் சம்பந்தமாக வழங்கிய தகவல்கள் அனைத்தும் போலியானவை என்று, விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சியிலிருந்து புலிகளின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவர், கொழும்பு தனியார் வைத்திய சாலைக்குச் சிகிச்சைக்காக வந்திருப்பதாக, மதன்குமார் தெரிவித்த தகவல் தவறானது என்று தெரியவந்துள்ளதாக விசாரணைகளை நடத்திய பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் அதிகாரி தாப்ரூவிடம் மதன்குமார் தெரிவித்த தகவல்கள் பற்றி, தாப்ரூ யாரிடமும் கூறவில்லை எனவும், அது சம்பந்தமாக உளவுப் பிரிவினருக்கு எதுவும் தெரியாதெனவும் அறியவந்துள்ளது.

இதேவேளை, கொழும்பு கதிரேசன் வீதியில் மதன்குமார் தங்கியிருந்த லொட்ஜ் பலத்த சோதனைக்குள்ளாக்கப்பட்டிருகிறது. இதேவேளை- கடந்த மாதம் 25 ஆம் திகதி அதிகாலை தெஹிவளைப் பகுதியில் நடத்தப்பட்ட சோதனையில் - கைதான சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைககாக கல்கிசை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# பேச்சுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு இந்த வாரத்திற்குள் வெளியிடப்படும்!

## ரணிலின் ஆலோசகர் அலிஸாஹிர் கூறுகிறார்

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை, மீண்டும் ஆரம்பமாகுவது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல், இந்தவாரம் வெளியிடப்படலாமென, பிரதமரின் கொள்கைத் திட்டமிடல் அபிவிருத்தி அமுலாக்கல் அமைச்சு ஆலோசகரும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய சகாவுமான அலிஸாஹிர் மௌலானா தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் - தாமரைக்கேணி அலிஸாஹிர் மௌலானா வித்தியாலயத்தில் இடம்பெற்ற வகுப்பறைக் கட்டடத் திறப்புவிழாவின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, அவர் இதனைக் கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள்- நியாயமான சில கோரிக்கைகளை முன்வைத்தே, பேச்சுவார்த்தையிலிருந்து விலகியிருக்கிறார்கள். இதனால், மீண்டும் யுத்தம் ஏற்பட்டுவிடும் என எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும், அலிஸாஹிர் மௌலானா குறிப்பிட்டார்.

எமது நாட்டில் இருபது வருடங்கள் நடைபெற்ற யுத்தத்திற்கு, இருபது நாட்களில் சமாதானத்தீர்வு கண்டுவிடமுடியாது. எனினும், சமாதானத்தை நோக்கி நகர்வதற்கு, தற்போது இரு தரப்பினருக்குமிடையே கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை, அரசாங்கம் நியாயம் கண்டுள்ளது. அதேபோல, அரசாங்கத்தின் சிக்கல் நிலையினையும் புலிகள் உணர்ந்துவிட்டார்கள்.

அந்த அடிப்படையில், தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமாக - ஜனநாயக வழியிலான சமாதானத் தீர்வைக்காண புலிகள் இயக்கம் தயாராக இருப்பதை அறிய முடிகிறதென, அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்தம் நடைபெற்றுவரும் நிகழ்ச்சித் தொடரில், எதிர்வரும் வெள்ளிக்கிழமை 'வாலி வதை' என்னும் விடயம் தொடர்பாக, செஞ்சொற் செம்மல் இரா.கேதீசன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

# ஒஸ்மானியா கல்லூரியை மீளத்திறக்க வேண்டுகோள்

## யாழ். முஸ்லிம் மக்கள் மகஜர்

யாழ்.குடாநாட்டில் மீளக்குடியேறியுள்ள, முஸ்லிம் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவசரத்தேவைகள் என்பன தொடர்பாக, யாழ்.கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் மக்கள் பணிமனையினர், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கு மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

அந்த மகஜரில் - ஐம்பதுக்கும் அதிகமான பாடசாலை செல்லும் முஸ்லிம் மாணவர்கள் இங்கு இருக்கின்றபோதும், அவர்களுக்காகக் கட்டப்பட்ட இரண்டு கல்லூரிகளும், சிறுவர் பாடசாலையும் இயங்காதநிலையிலுள்ளன. எனவே, ஒஸ்மானியா கல்லூரியைத் திறந்து, கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யும்படி கேட்கப்பட்டுள்ளது.

மீளக்குடியேறியுள்ள முஸ்லிம்களின் வீட்டுப் பிரச்சினைகள், நஷ்டஈட்டுப் பிரச்சினைகள், பள்ளிவாசல் புனரமைப்பு, பொதுவசதிகள் புனரமைப்பு ஆகியவற்றின் அவசியம் குறித்தும் அநத மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நகரில் புதிய காவலரண்கள்



வண்ணை பெருமாள் கோயிலுக்கு முன்பாக மண்மூட்டைகளால் படையினர் அமைந்துள்ள புதிய காவலரணைப் படத்தில் காணலாம்.

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் மத்தியில் படையினர் மண்மூட்டைகளினாளான அரண்களை அமைத்து, பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்.நகரின் மத்தியில் அமைந்திருக்கும் ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) ஆகிய கட்சிகளின் அலுவலகங்களைச் சுற்றியே இராணுவத்தினர் மேற்படி பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

போக்குவரத்து நெரிசலுள்ள யாழ். நகரத்தின் மத்தியில், படையினர் மண்மூட்டைகளைக் கொண்டு பாதுகாப்பு அரண்களை மீண்டும் அமைப்பதனால் - வாகனங்கள் போக்குவரத்துச் செய்வதிலும், பல சிரமங்கள் ஏற்படுகின்றன.

# ஜனாதிபதி கொலை முயற்சி வழக்கு: துன்புறுத்தியே வாக்குமூலம் பெற்றனர்!

## முதலாவது பிரதிவாதியான பெண் நீதிமன்றில் தெரிவிப்பு

2000 ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தல் காலத்தின்போது, கொழும்பு மாநகரசபை மைதானத்தில் வைத்து ஜனாதிபதி மீது மேற்கொள்ளப்பட்ட கொலைச் சம்பவம் தொடர்பாக, கைது செய்யப்பட்டிருந்த முதலாவது பிரதிவாதி வசந்தி ரகுபதி உட்பட நான்கு பேர் அடங்கிய சந்தேக நபர்கள் மீதான விசாரணை, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆரம்பமாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பு நீதிமன்றில் ஆரம்பமாகிய வழக்கு விசாரணையில், முதலாவது பிரதிவாதி வசந்தி ரகுபதி ஆஜர் செய்யப்பட்டிருந்தார். ஜனாதிபதி மீதான கொலைச் சம்பவம் தொடர்பாக, சட்டமா அதிபரால் - பொலிஸார் உட்பட 44 பேரினது சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

மேற்படி வழக்கு விசாரணை தொடர்பாக, நேற்றுமுன்தினம் கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்த முதலாவது பிரதிவாதி வசந்தி ரகுபதி மீதான வழக்கு விசாரணையின்போது, தன்னிடமிருந்து குற்றப் புலனாய்வுத்துறையினரால் பெறப்பட்ட வாக்குமூலங்கள் சுயமாகப் பெறப்பட்டவை அல்ல என்றும், தன்னைத் துன்புறுத்தி பலவந்தமாகப் பெறப்பட்ட வாக்குமூலங்களே இதில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெறவுள்ளதுடன், ஏனைய மூன்று சந்தேகநபர்கள் மீதான விசாரணைகளும் கொழும்பு மேல் நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

# கலைஞர் மனைவி, மகள் வைகோவுடன் சந்திப்பு!



தி.மு.க. தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான கலைஞர் மு.கருணாநிதியின் மனைவியும், மகளும்- ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவை வேலூர் மத்திய சிறையில் சந்தித்துப் பேசியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நடந்த இந்தச் சந்திப்பில், கலைஞர் மு.கருணாநிதியின் மனைவி ராஜாத்தி அம்மாள் மற்றும் மகள் கனிமொழி ஆகியோர் வைகோவைச் சந்தித்தனர்.

சுமார் 30 நிமிடங்கள் - இவர்களது சந்திப்பு இடம்பெற்றது. ஏற்கனவே - வைகோவை, கலைஞர் மு.கருணாநிதி - இரண்டு தடவைகள் சிறைக்குச் சென்று சந்தித்திருக்கிறார்.

மதுரை - திருமங்கலத்தில் நடந்த பொதுக்கூட்டமொன்றில், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதாகக் கூறப்பட்டு - வைகோ, பொடா சட்டத்தின்கீழ் பலமாதங்களாகத் தடுத்துவைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இந்து ஆலயச்சூழல்களில் வாழும்

# வறுமை நிலையிலுள்ளோருக்கு மலசலகூடம் அமைக்க உதவி!

யாழ்.மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்களின் பரிபாலன சபையாரின் சிபார்சின் அடிப்படையில், ஆலயச்சூழலில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்கின்ற மலசலகூட வசதியற்ற பத்துக் குடும்பங்களுக்கு மலசலகூடங்களை அமைத்துக்கொடுப்பதற்கென - சீமெந்து, மலசலகூடக் கோப்பை, சீற் என்பன இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்படவுள்ளன.

ஆலய பரிபாலன சபையினர், யாழ்.பிராந்திய அலுவலகத்தில் இதற்கான விண்ணப்பங்களைப் பெற்று, உரியர்வர்களிடம் ஒப்படைத்து, அவர்களால் பூரணமாக்கப்பட்ட விண்ணப்பங்களை - கிராம அலுவலர், பிரதேச செயலர் ஆகியோரால் உறுதிப்படுத்தி, பிராந்திய அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். தகுதியானவர்களுக்கு மேற்கூறிய பொருட்கள் அமைச்சினால் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


வாழ்க வளமுடன்


HAPPY BIRTHDAY


முதலாவது அகவையில்



பெயர் - ஜெ.துளசிகன்
முகவரி - கைதடி தெற்கு, கைதடி.

இரண்டாவது அகவையில்

பெயர் - இ.திலக்சன்
முகவரி - கைதடி தெற்கு, கைதடி.



இரண்டாவது அகவையில்



பெயர் - அ.நிக்ஷென் அன்ரனி
முகவரி - செல்லாச்சி அம்மையார் வீதி, சுன்னாகம்.

ஐந்தாவது அகவையில்

பெயர் - நி.நிரூபா
முகவரி - இல.1.மருதடி வீதி, யாழ்ப்பாணம்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



------------------
பெற்றார் ஒப்பம்


மேஜர் முரளி ஞாபகார்த்தக் கிண்ணம்

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் சுவிஸ் அணிகளும் பங்கேற்பு!

(யாழ்ப்பாணம்)

மேஜர் முரளி ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி, எதிர்வரும் 10 ஆம் திகதி கிளிநொச்சியில் ஆரம்பமாகவுள்ளது.

ஐந்து தினங்கள் தொடர்ந்து நடைபெறும் இந்தப் போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகளும், தமிழீழ விளையாட்டுத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடக்கு - கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த - 13, 15, 17, 19 வயதுப் பிரிவினிடையே, நான்கு பிரிவுகளாக இந்தச் சுற்றுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இம்முறை முதற்தடவையாக - இந்தச சுற்றுப்போட்டிகளில் பங்கு பற்றுவதற்காகச் சுவிற்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த உதைபந்தாட்ட அணிகளும், கிளிநொச்சிக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போட்டிகளில் கலந்துகொள்ளும் மாவட்ட அணிகள் தங்களைத் தயார்படுத்திக்கொள்ளுமாறும், விளையாட்டுத் துறையினரால் தயாரிக்கப்பட்ட போட்டி நிரலின்படியே, போட்டிகள் அனைத்தும் நடைபெறும் என்றும் தமிழீழ விளையாட்டுத்துறை அறிவித்துள்ளது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### பெருமாள் கோயில் கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஜீர்ணோர்த்தாரண நவகுண்டல மகா குமபாபிஷேகம், நாளை காலை 9.29 இற்கும் 10.53 இற்கும் இடையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக பூர்வாங்கக் கிரியைகள், இன்று காலை 9.27 இற்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து கிரியைகள் நடைபெற்று, வரும் ஞாயிற்றுக்கிழமை யாகம் ஆரம்பமாகும்.

எதிர்வரும் திங்கட்கிழமையும், மறுநாள் செவ்வாய்க்கிழமையும் பக்தர்கள் எண்ணைக்காப்புச் சாத்துதல் இடம்பெறும். தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறவுள்ளது. (101)

### ஆசீர்வாதப்பர் திருவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத் திருவிழா, எதிர்வரும் 11 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

இன்று மாலை 6 மணிக்கு, பங்குத்தந்தை அன்ரன் மத்தாயஸ் அடிகளார் தலைமையில் கொடியேற்றம் இடம்பெற்று, 10 ஆம் திகதி வரை நவநாள் வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

நற்கருணை விழாவும், முதல் நன்மைத் திருப்பலியும், 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும். 11 ஆம் திக்தி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலி, யாழ். ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. (61)

### பிரதேச செயலர் இடமாற்றம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலகத்தில் தலைப்பீட உதவி அரசாங்க அதிபராக இதுவரை கடமையாற்றிய, வி.வீரபத்திரபிள்ளைக்கு கரவெட்டி பிரதேச செயலராக நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது.

மிகவிரைவில் இவர் தனது கடமையைப் பொறுப்பேற்கவுள்ளதாக, யாழ். செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். (அ, 24)

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம் ஜீ.ரி.இசற் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள, 'யாழ். பிராந்தியத்திற்கான அவசிய வழிகாட்டல்' என்னும் விடயம் தொடர்பான கருத்தரங்கு, எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு ஜீ.ரி.இசற்றின் மோர்கன் ஓய்வுவிடுதியில் நடைபெறவுள்ளது.

### அமெரிக்காவின் நவீனரக துப்பாக்கி பொலனறுவ வாசியிடம்!

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட அதிநவீன்ரக துப்பாக்கியொன்றை, பொலனறுவைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். அதனை வைத்திருந்த நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. இந்த அதிநவன துப்பாக்கி எவ்வாறு இலங்கைக்கு எடுத்துவரப்பட்டது என்பது தொடர்பாக, பொலனறுவைப் பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

# கிளிநொச்சி வீராங்கனைகள் கராத்தேயில் முதலாமிடம்!

(ஆழியவளை)

விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்பட்ட மாகாண மட்ட கராத்தே சுற்றுப்போட்டியில், கிளிநொச்சி மாவட்ட வீராங்கனைகள் இருவர் முதலிடம் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி குருகுலத்தைச் சேர்ந்த பி.கோமளமேரி 60 கிலோவுக்குக் கீழான எடைப் பிரிவிலிலும், க.தனுசயந்தி 53 கிலோவுக்குக் கீழான எடைப் பிரிவிலும் பங்குபற்றி முதலாம இடத்தைப் பெற்றுள்ளனர்.

இவர்கள், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள, இலங்கைத் தேசிய கராத்தே சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்குத் தகுதிபெற்றுள்ளனர். (122)

# மடுவுக்கு பக்தர்கள் செல்ல விசேட போக்குவரத்து ஏற்பாடு

மடு அன்னையின் வருடாந்த உற்சவத்தில் - பக்தர்கள் கலந்துகொள்வதற்கு வசதியாக, இலங்கைப் போக்குவரத்துச் சபையினர், விசேட போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, மடுத் திருவிழாவுக்கு வருகின்றவர்கள் வீண்சிரமங்களைத் தவிர்க்க - பெயர், அடையாளஅட்டை, வாகனத்தின் பத்திரங்கள் போன்றவற்றின் மூன்று பிரதிகளுடன் வரும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


புகையிரதம்மூலம் பயணிப்போர்- வவுனியா, மதவாச்சி புகையிரத நிலையங்களிலிருந்தும், மடு அன்னையின் திருவிழாவுக்குச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## படங்களும் செய்திகளும்...





நல்லூர் 'புனித யாக்கோப்பு பாலர் பாடசாலை'யில், வருடாந்த விளையாட்டுப் போட்டியில் நடைபெற்ற சிறார்களின் உடற்பயிற்சிக் கண்காட்சியினைப் படங்களில் காணலாம்.




உள்ளூராட்சி வாரத்தையொட்டி, சாவகச்சேரி நகரசபை ஊழியர்கள் மரம் நாட்டுவதைப் படத்தில் காணலாம். (29)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## மாணவருக்கான முன்னாயத்தப் பயிற்சிகள்



**மாணவர் மலர்**



(01) கீழே தரப்பட்டுள்ள பத்திரிகைச் செய்தியை வாசித்து, வினாக்களுக்கு விடை தருக.

> வெள்ளத்தாலும், மண்சரிவாலும் அதிகளவு பாதிக்கப்பட்ட இரத்தினபுரி மாவட்டத்திலேயே, பெருமளவு உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அத்துடன், இலட்சக் கணக்கானோர் இருப்பிடங்களைவிட்டு வெளியேறியுள்ளனர்.
>
> ஆயிரக்கணக்கான வீடுகளும் சேதமடைந்துள்ளன. மாத்தறை மாவட்டத்தில் இருபத்தையாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்திருப்பதுடன் பலர் வீட்டுக்கூரைகளிலும், மரக் கிளைகளிலும் தங்கியுள்ளனர். தென்பகுதியில் நெலுவ, உடுகம, தவளம ஆகிய நகரங்கள் நீரில் மூழ்கிவிட்டன. அக்குரச, கம்புறுப்பிட்டி, மாலிம்பொடை ஆகிய பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்துவருவதால் நிலைமை மோசமடைந்து வருகின்றது. காலி மாவட்டத்தில் - மாபொலகம என்ற இடத்தில், நாற்பத்தொன்பது அடி உயரத்தில் வெள்ளம் காணப்படுகின்றது. அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு மீட்கும் பணிகளில் ஹெலிகொப்ரரும், படகுகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

(அ) வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் எவை?

..........................................................................

(ஆ) எந்த நகரங்கள் நீரில் மூழ்கிவிட்டதாகப் பத்திரிகைச் செய்தி கூறுகின்றது?

..........................................................................

(இ) எந்த மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் வீட்டுக்கூரைகளிலும், மரக்கிளைகளிலும் தங்கியுள்ளனர்?

..........................................................................

(ஈ) நாற்பத்தொன்பது அடி உயரத்தில் வெள்ளம் காணப்படும் இடம் எது?

..........................................................................

(உ) எந்தப் பகுதிகளில் தொடர்ந்து மழைபெய்து வருவதாகப் பத்திரிகைச் செய்தி கூறுகின்றது?

..........................................................................

(ஊ) மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு மீட்கும் பணிகளுக்கு எவை பயன்படுத்தப்படுகின்றன?

..........................................................................

(எ) பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக?

1) உயிரிழப்புகள் ..........................................
2) வீட்டுக்கூரை ..........................................
3) வெள்ளப்பெருக்கு ..........................................
4) மரக்கிளை ..........................................

(ஏ) பின்வரும் தமிழ்ச்சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக?

1) மழை ..........................................
2) மாவட்டம் ..........................................
3) கூரை ..........................................
4) படகு ..........................................

(ஐ) வெள்ளப்பெருக்கால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக? (ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்).

1)..........................................
2)..........................................
3)..........................................

(02) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும், பிழையாயின் பிழை எனவும் எழுதுக?

1) ஒரு சுமையைச் சாய்தளங்களின் வழியே இலகுவாக இழுத்துச் செல்லமுடியும். (.......)
2) நீராவிப் படகு இயக்க, நீர் அவசியமில்லை. (.......)
3) பற்சில்லுகள் கொண்ட ஓர் உபகரணம் முட்கடிகாரமாகும். (.......)
4) காந்தத்தின்மூலம், காந்தப் பாம்பு விளையாட்டை விளையாடமுடியாது. (.......)
5) கத்திரிக்கோலை முறையாகப் பயன்படுத்துவதற்குப் பயிற்சி பெறவேண்டும். (.......)
6) அரிவி வெட்டு நடனம் கிராமிய நடனமாகும் . (.......)
7) மதில்களில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை அகற்றுவதற்கு, நீர் கலக்கப்பட்ட சுழல் வளி ஓட்டம் கொண்ட இயந்திரத்தைப் பயன்படுத்துகின்றார்கள். (.......)
8) பப்பாசிக் குழாய்களைப் பயன்படுத்தி ஊதிகளைச் செய்யமுடியாது. (.......)
9) வௌவால் இரவிலேயே உணவு தேடச்செல்லும். (.......)
10) மழைகாலத்தில் வானில் நட்சத்திரங்களைக் காணமுடியும். (.......)

(03) கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

1) கிலுகிலுப்பை ஒன்றை (புத்தளிப்புக் கருவியை) ஆக்குவதற்குத் தேவையான பொருட்களை எழுதுக?

..........................................................................

..........................................................................

2) தபாற்கந்தோரில் வாங்கக்கூடிய மூன்று பொருட்களை எழுதுக?
1).......................
2).......................
3).......................

3) இலங்கையில் உள்ள மூன்று ஆறுகளின் பெயர்களை எழுதுக?
1).......................
2).......................
3).......................

4) 'அலவாங்கு' ஒன்றைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய வேலைகள் மூன்றினை எழுதுக?
(1).......................
(2).......................
(3).......................

5) வீட்டுத்தோட்டத்திற்குவரும் மூன்று பூச்சிகளின் பெயர்களை எழுதுக?
1).................................
2).................................
3).................................

6) வெள்ளப்பெருக்கால் ஏற்படக்கூடிய மூன்று நோய்களின் பெயர்களை எழுதுக?
1).................................
2).................................
3).................................

(04) கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| செலுத்திய பணம் | செலவாகிய பணம் | மீதிப் பணம் |
|---|---|---|
| ரூபாய் 10.00 | ரூபாய் 4.25 | |
| ரூபாய் 50.00 | ரூபாய் 31.50 | |
| ரூபாய் 200.00 | ரூபாய் 324.00 | |
| ரூபாய் 500.00 | ரூபாய் 217.00 | |
| ரூபாய் 400.00 | ரூபாய் 312.25 | |
| ரூபாய் 1000.00 | ரூபாய் 756.75 | |
| ரூபாய் 700.00 | ரூபாய் 627.50 | |
| ரூபாய் 100.00 | ரூபாய் 69.75 | |

(05) கீழே கேட்கப்படும் பெறுமானங்களுக்கு விடை தருக.

1) 8603 இல் 3 இன் பெறுமானம் ......................
2) 4300 இல் 3 இன் பெறுமானம் ......................
3) 8931 இல் 3 இன் பெறுமானம் ......................
4) 3170 இல் 1 இன் பெறுமானம் ......................
5) 6050 இல் 6 இன் பெறுமானம் ......................

(06) A நிரலில் தரப்பட்டுள்ள கணக்குகளுக்குக் கிடைக்கும் விடைகளை, B நிரலில் இருந்து தெரிவுசெய்து தொடர்புபடுத்துங்கள்.

| A | B |
|---|---|
| 1. 243 ÷ 3 | 141 |
| 2. 468 ÷ 4 | 261 |
| 3. 522 ÷ 2 | 89 |
| 4. 445 ÷ 5 | 81 |
| 5. 846 ÷ 6 | 117 |

(07) 500.00 ரூபாயைச் செலுத்தக்கூடிய தாள் காசுகளின் தொகையை எழுதுங்கள்?

| பெறுமதி | தாள் காசுகளின் எண்ணிக்கை |
|---|---|
| பத்து ரூபாய் தாள் காசுகள் | |
| இருபது ரூபாய் தாள் காசுகள் | |
| ஐம்பது ரூபாய் தாள் காசுகள் | |
| நூறு ரூபாய் தாள் காசுகள் | |

(08) பின்வரும் பிரசினங்களைத் தீர்க்குக.
கட்டத்திற்குள் தரப்பட்டுள்ள A,B,C,D,E எனும் எழுத்துக்கள், இடம்பெற்ற தடவைகளுக்கு ஏற்ப அட்டவணையைப் பூர்த்தி செய்க.

B D A E C A D B C C B C B D E A
A C B D B C A C A D C B D A E B B D B

| எழுத்து | எண்ணிய விதம் | எண்ணிக்கை |
|---|---|---|
| A | | |
| B | | |
| C | | |
| D | | |
| E | | |

(09) "நான் ஒரு விவசாயியாக இருந்தால்".... என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.

(1)..........................................................
(2)..........................................................
(3)..........................................................
(4)..........................................................
(5)..........................................................
(6)..........................................................

(தொடரும்...)

வி.என்.எஸ். உதயசந்திரன்
B.A. (Cey), B.Ed (Hons), Dip. in Ed.

# அறுவடைக்குக் காலம் குறிக்கிறார்

## தெற்கின் போர்த் தேவதை!





சமாதானப் பேச்சுக்களின் பெறுபேறாக - நிதி கிடைத்ததாலோ அல்லது கடந்த மூன்றுமாத இடைவெளிக்குள் தமிழர் தரப்பின் இரண்டு வணிகக் கலங்களின் மீதான அழிப்புத் தாக்குதலுக்குப் பதிலாக, ஏதாவது சடுதித் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற எதிர்பார்ப்புக் காரணமாகவோ, சந்திரிகா போர் பற்றிய அபாய அறிவிப்பை விடுத்துள்ளார்.

அதாவது - 'தமிழர் தரப்புப் போர்முனைப்புக் கொண்டுள்ளதையே, தமிழர் தரப்பின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன' என்ற வகையில், நேரடிக் குற்றச்சாட்டாக இது அரங்கேற்றப்பட்டுள்ளது. அத்தோடு மறுபுறத்தே முப்படைகளையும் அதிஉஷார் நிலையில் வைத்திருத்தல், பாதுகாப்பு அமைச்சைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தல் போன்ற நடவடிக்கைகள்மூலம், போரேவுதளத்துக்கு அதிபதியாகத் தன்னை உயர்த்தியுள்ளார்.

அத்தோடு, தமிழர் தரப்புடனான தனது முன்னைய ஒட்டுறவாடலின் பெறுபேறு என்ற கருத்துப்பட, சில உண்மைக்குப் புறம்பான தகவல்களைச் சர்வதேசத்தின் கவனத்திற்குக்கொணடு வரும் முயற்சியையும், வெகுகச்சிதமாக அரங்கேற்றியுள்ளார்.

குறிப்பாக, 1994 - 1995 ஆம் ஆண்டுப் பகுதிகளில் தனது அரசுடன் தமிழர் தரப்பு மேற்கொண்ட பேச்சுக்களின்போது, அவர்கள் போருக்குத் திரும்புவதற்குப் பயன்படுத்திய யுத்திகளையே இப்போதும் நடைமுறைப்படுத்தி வருவதே, அவர்கள் மீண்டும் போருக்குத் திரும்புவார்கள் என்ற சந்தேகத்திற்கான காரணம் என்று தெளிவுபடுத்தியிருக்கிறார் சந்திரிகா.

ஆனால், இவற்றிற்கு மாறாகத் தானே சிங்களத்தின் போர் வெறியைப் தொடர்ந்தும் உச்சஸ்தாயியில் வைத்திருக்கிறார் என்பதை, தனது நடவடிக்கைகள்மூலம் உணர்த்தி வருகிறார் சந்திரிகா.

சிங்கள மக்களுக்கான அறைகூவல்களாக சந்திரிகா வெளியிட்ட கருத்துக்கள் - எமது கவனத்திற்கு உட்படவேண்டும், உன்னிப்பாக நோக்கப்பட வேண்டும் என்ற ரீதியில் அமைந்திருக்கும் காரணி யாதெனில் - தமிழர் தரப்பு என்றுமில்லாதபடி பலத்தைப் பேணவேண்டிய, பலப்படுத்தப்பட வேண்டிய தேவையுள்ளது என்கிற உண்மை, அச்செய்திக்குள் மென்மையாக இழையோடிப் புதைந்திருப்பதேயாகும்.

ஆம். பாதுகாப்புத்துறைப் பலப்படுத்தலில் அதியுச்சத்திலிருந்துகொண்டு, எதிரியானவன் என்னைவிட மேலான பலத்தையுடையவன் என்று கூறுவதுதான் போருக்குத் தயார் என்று, ஜனாதிபதி விடுக்கிற குறியுணர்த்துகையே தவிர வேறெதுவுமில்லை. எனவே, அதற்கான நிகழ்வோட்ட ஆதரங்களாக இரு சம்பவங்களை இக்கட்டுரையினூடே கவனிப்போம்.

அவற்றில் முதன்மையானது, இந்தமாத ஆரம்பத்தில் இடம்பெற்ற தெற்கின் போர்வீரர் நினைவு நாளில் சந்திரிகா ஆற்றிய உரையாகும். போரில் கொல்லப்பட்ட முப்படையினரையும் நினைவுகூர்வதற்கான தினமாக, ஜூன் மாதம் 7 ஆம் திகதியை, கடந்த வருடத்திலிருந்து அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது. அந்தவகையில், இந்த வருடத்தைய நிகழ்வு கண்டி-மைலப்பிட்டியாவில் அமைந்துள்ள இராணுவத்தினர் பூங்காவில் இடம்பெற்றது.

ரோக்கியோ மாநாட்டுக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர், இடம்பெற்ற இந்தவருடத்தைய நிகழ்வு - ஊடக உலகின் கவனத்தைத் தன்பக்கம் திருப்பாவிட்டாலும், சந்திரிகாவின் போர் சார்ந்த விருப்பைத் தெரிவிப்பதாக, இதுவரையான போரின் தாக்கத்தை உள்வாங்காத தன்மையதாக அமைவு பெற்றிருந்தது.

இந்த நிகழ்வில் - இனவாதத்தின் தாயாகத் தன்னைத் தோற்றங்காட்டிய அம்மையார் சந்திரிகா, ரோக்கியோ நிதியுதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தையே முதற்தெரிவாக எடுத்துக்கொண்டார். அதாவது, ரோக்கியோ மாநாடு மூலம் கிடைக்கப்பெறும் நிதியுதவியைக் கொண்டு, வட - கிழக்குப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதுடன் மட்டும் நின்றுவிடாது, யுத்தத்துக்காகத் தம்மை அர்ப்பணித்த முப்படைகளைச் சேர்ந்த படையினருக்கும் உதவிகளை வழங்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

அதற்குரிய முன்திட்டமாக - இறந்த படையினர் குடும்பங்களுக்கு 10,000 வீடுகள் அமைக்கப்படவேண்டும் என்ற ஆதங்கத்தை முன்வைத்தார். அதாவது, புனரமைப்பு என்ற போர்வையில் பெறப்படும் நிதி எவ்வாறு பயன்பாடடைய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

அத்தோடு, 'இங்கு நாம் நினைப்பதுபோல ஒவ்வொருவரும் எதுவும் செய்யமுடியாது. சிலவற்றைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கவேண்டும். சிலவற்றைப் பேச்சுவார்த்தை இல்லாமல் செயற்படுத்தவேண்டும்' எனச் சூட்சும உரைநிகழ்த்திய சந்திரிகா, வரலாற்றில் முன்னர் இடம்பெற்ற யுத்தங்களை விட, இலங்கைத் தீவின் யுத்தம் கொடூரமானது என்ற உண்மையை உள்வாங்கினார்.

ஆகாயம் - நீர் - தரை எனச் சகல பகுதிகளிலும் சண்டைகள் இடம்பெற்றன. மிகவும் அதிநவீன ஆயுதங்களுடனான யுத்தத்திற்கு நாம் முகங்கொடுக்க வேண்டியிருந்தது எனத் தெரிவித்து, 'இந்த அரசுக்கு எதிரான கடுமையான யுத்தம் செய்யப்பட்ட சமயங்களும் உள்ளன' எனத் தமிழர் தரப்பின் தாக்குதல்களுக்கு, தாம் முகங்கொடுக்க முடியாமல் பின்வாங்கிய வரலாற்றைக் குறிப்பிட்டார்.

அத்தோடு, நாட்டின் தேசியத்தைப் பாதுகாக்கத் தியாகம் செய்தவர்கள் என்ற வகையில், கடந்த வருடம் முதல் இந்தப் படையினரைக் கௌரவிக்க, இந்தத் தினத்தைத் தெரிவு செய்ததாகத் தெரிவித்த சந்திரிகா, இந்தக் கொடிய போரினால்- 21,000 போர் வீரர்கள் உயிர்நீத்ததாகவும், 10,000 பேர் அங்கவீனர்களானதாகவும் கணக்குக் காட்டியிருந்தார். ஆனால், சண்டைகளின்போது கொல்லப்பட்டு, தம்மால் பொறுப்பேற்கப்படாமல் சிதையூட்டப்பட்ட பல ஆயிரக்கணக்கான படையினரையும், தப்பியோடும்போது தாமே கைவிட்டுச்சென்ற ஏராளமான தமது சகாக்களின் சடலங்களையும், இன்னமும் காணமற்போனோர் பட்டியலில் வைத்திருக்கும் சிங்களம் அத்தொகையையும் இணைத்துப் பார்த்தால், தனது படைத் தொகையில் மூன்றிலொரு பங்கை, தனது வலிந்தபோருக்கு அறுவடையாக்கியிருக்கின்றது.

போரின் அறுவடைகளை உள்வாங்கி, யதார்த்தங்களை ஏற்றுக்கொண்டது போன்ற தோற்றத்தைத் தந்த மேற்படி உரை - உண்மையிலேயே, மீண்டுமொரு போருக்கான தயார்ப்படுத்தலே என்பதைச் சரியாக ஒருவார காலத்தில் அறியப்படுத்தினார் சந்திரிகா.

ஆம். ஜூன் மாதம் 14 ஆம் திகதி, தமிழர் தரப்பின் வணிகக் கப்பலின் மீதான வன்மங்கலந்த தாக்குதலுக்கு உத்தரவிட்டதன்மூலம்,



போர்த் தயார்ப்படுத்தல் நடவடிக்கையை மேற்கொண்டார் சந்திரிகா.

தமிழர்தரப்பு உடனடிப் பதில் தாக்குதலில் ஈடுபடும் அல்லது போர்நிறுத்த உடன்பாட்டை மீறியதான செயற்பாட்டை அடையும் என்ற எதிர்பார்ப்பே, சிங்களத்தினதாக இருந்தாலும், அவர்கள் எதிர்பார்த்த எந்தவித சமிக்ஞையையும் வெளிப்படுத்தாமல், தமிழர் தரப்புக் காத்திருந்ததே இப்போது ஏமாற்றத்தைத்தான் தந்திருக்கிறது.

அதன் காரணமாகவே, சர்வதேசத்தை நோக்கிய அபாய அறிவிப்பொன்றை, தனது பேச்சாளரின்மூலம் அறியத்தந்திருக்கிறார் சந்திரிகா. மீண்டுமொரு யுத்தத்துக்குத் தமிழர் தரப்புத் தயாராகிவிட்டதாகவும், யுத்தத்தை எப்போது ஆரம்பிப்பது என்பதைத் தீர்மானிப்பது தலைவர் பிரபாகரனின் கையிலிருப்பதாகவும் தெரிவித்து, குறிப்பாக யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான யுத்தமொன்று இடம்பெற்றால், பத்து நாட்களிற்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய விநியோகங்களையே படையினர் கொண்டிருப்பதான ஒரு அறிவிப்பை விடுத்திருக்கிறார். ஆறுமாத காலத்துக்குத் தேவையான இருப்பை, சிங்கள தேசத்தின் ஒவ்வொரு படையணியும் கொண்டிருக்கிறது என்பதை மறைத்து, சந்திரிகா நவீன ஆயுதங்களின் புதிய அறுவடையொன்றுக்கு ஆயத்தமாகின்றார்.

ஏதோ இதுவரை அவர்கள் ஆயுதக் கொள்வனவில் ஈடுபடவில்லை என்பதல்ல இதன் அர்த்தம். போர்நிறுத்த காலத்தில் சகல படைத்தரப்புக்களும் தேவைக்கு மேலாகப் பலப்படுத்தப்பட்டுள்ளன, இப்போதும் பலப்பட்டுவருகின்றன. இந்த ஆண்டும் நாட்டின் மொத்த வரவு செலவுத் திட்டத்தில் 24 விழுக்காட்டை பாதுகாப்புத்துறை கொண்டிருப்பதானது, இதைத்தவிர வேறெந்தச் செய்தியையும் சொல்லவில்லை. கடற்படை தனது வளர்ச்சியில் அமெரிக்கப் பயன்பாட்டைப் பெறுவதற்கு முனைப்புக் கொண்டிருப்பதும் இதையே தெளிவுபடுத்துகிறது. இருந்தும் இவ்வாறான விரிவுபடுத்துகையில் திருப்திகொள்ளாமல், பாதுகாப்பு அமைச்சைக் கையகப்படுத்தும் உள்ளக அறுவடையில் ஈடுபட்டிருக்கிறார்.

இவ்வாறான அறுவடைகளில் சந்திரிகா ஈடுபடுவதற்கான காரணத்தை, அவரது வெளிவிவகார ஆலோசகர் அர்த்தம் பிசகாமல் அறியத்தருகிறார். அதாவது, இலங்கைத் தீவு சைப்பிரஸைப்போல் மாறிக்கொண்டு வருகிறது என்ற கவலையைத் தெரியப்படுத்தியிருக்கிறார். எவ்வாறு சைப்பிரஸ் என்ற நாட்டுக்குள் துருக்கி, கிரேக்க இன மக்கள் தாம்சார்ந்த இரு நாடுளையும், இரு தலைவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களோ அதுபோன்றே இலங்கைத் தீவும் இப்போது செயற்பட்டு வருவதை ஒப்புக்கொண்டுள்ள அவரது நிலை, சந்திரிகாவின் போர் நாட்டத்துக்கான காரணம் யாதென்பதை உரைத்து நிற்கிறது. அதாவது, தமிழர் தரப்பு அங்கீகாரத்தைப் பெறமுன்னரேயே போர் ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்பதே ஜனாதிபதியின் பெருவிருப்பாக அமைவு பெற்றுள்ளது.

**சுதர்மா**

எனவே, இராணுவக் கலையின் மேதையான தத்துவஞானி சன்சூ அவர்களின் - 'உன்னை அறி', 'எதிரியை அறி', 'உனது. பலவீனத்தைக் கண்டறி', 'எதிரியின் பலவீனத்தைக் கண்டறி', 'அதன் பின் தோல்வி பற்றிய கவலையின்றி நூறு சமர்களை நீ நடத்தலாம்' என்கிற வார்த்தைகளுக்கே வடிவம் கொடுத்து, ஓயாத அலைகளை வரலாறாக்கி நிற்கும் தமிழர் தரப்பிற்கு, சிங்கள தேசத்தின் காலங்காலமாக அறுவடைகளை மொத்தமாகவே மீண்டுமொருமுறை அர்ப்பணிக்கத் துடிக்கிறார் சந்திரிகா. காலவோட்டத்தின் தடத்தில் கற்பிதங்களை சிங்களத்திற்கு வழங்கிய ஒரு தலைமையை சமாதானத் தடத்திலிருந்து புறந்தள்ள, சிங்களத்தின் பிதாமகள் மேற்கொள்ளும் முயற்சிகள் தோல்வியைத் தழுவும் என்ற போதிலும், மறுபுறத்தே தமிழர் தரப்பைப் பலப்படுத்த வேண்டிய தேவை எமக்கு இன்றியமையாதபடி எழுந்திருக்கிறது. ❖

# குரங்குப்பாஞ்சான் சம்பவம்; இருதரப்பு சந்திப்பு விரைவில்!

திருகோணமலை மாவட்டத்திலுள்ள குரங்குப்பாஞ்சான் காட்டுப் பகுதியில் - இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல்நிலை தொடர்பாக, இரண்டு தரப்புக்களுக்கும் இடையில் சந்திப்பு ஒன்றை நடத்துவதற்கு - போர்நிறுத்தக் கண்காணிப்புககுழு ஒழுங்குகளைச் செய்துள்ளது.

இந்தச் சந்திப்புக்காக, நேரம் ஒதுக்கித்தருமாறு இரண்டு தரப்பினரிடமும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கோரியுள்ளதாகத் தெரியவருகிறது.

# வசதிகள் அற்றநிலையில் முல்லை மகா வித்தியாலயம்

முல்லைத்தீவு மகா வித்தியாலம் அடிப்படை வசதிகள் எதுவும் அற்றநிலையில் இயங்கிவருவதனால் - கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மிகவும் பாதிப்படைந்துள்ளதாகப் பாடசாலைச் சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

தற்போது, இந்தப் பாடசாலையில் 740 மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள். 38 ஆசிரியர்கள் கடமைபுரிய வேண்டிய இந்தப் பாடசாலையில், 18 ஆசிரியர்கள் மாத்திரமே கடமை புரிகின்றார்கள்.

இதேவேளை - கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், நடனம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களை இங்கு கற்பிப்பதற்கு ஆசிரியர் எவருமில்லை என்பதும் கவலைக்குரிய விடயமாகும். (122)

# இலங்கையில் தலையிடுவதற்கு பிரிட்டன் மறைமுகமான ஆர்வம்!

## ஜே.வி.பி. கண்டித்து அறிக்கை

பிரிட்டனும், வேறு பலநாடுகளும் தமது மறைமுகமான இலக்குகளை வைத்து இலங்கையில் தலையீடு செய்வதாக, ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது. இது தொடர்பாக, ஜே.வி.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

பிரிட்டனின் உதவியுடன், அரசியலமைப்பை மாற்றவும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இலங்கையைப் பிரிட்டனின் கொலனி என்று, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நினைத்துக்கொண்டிருக்கிறார்.

அரசியல் யாப்புக்கு மாறான வகையில் -

இடைக்கால நிர்வாகத்தை வழங்குவதற்குப் பிரிட்டனில் சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

அரசாங்கம் - நாட்டையும், மக்களையும் பாதுகாப்பதற்குப் பதிலாக, புலிகளுக்கு எவ்வாறு உதவலாம் என்ற நோக்குடனேயே செயற்படுகிறது. புலிகள், அரசியல் யாப்புக்கு முரணான வகையில் அதிகாரத்தைப் பெறவே முயற்சி செய்கின்றார்கள் என்று, ஜே.வி.பியின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*முற்றியும் முற்றாது எறிந்தும் அறைப்படுத்தும்*
*பற்றற்கு அரியது அரண்.*

*திருக்குறள்.*

# நமது நோக்கு

## அயலிலிருந்து ஒரு பொறி!

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் - தனது பிராந்திய ஆதிக்க நலனை விஸ்தரிக்க முயன்றும், தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமல் தனது ஆதாயம் கருதி செயற்பட்டும் - வாங்கிக் கட்டிக்கொண்ட சம்பவங்களின் பின்னர்,

நீண்டகாலமாக இலங்கை விவகாரத்தில் நேரடியான தலையீடுகளைச் செய்வதில் - ஓரளவுக்கு வெளியே நிற்பதான தோற்றப்பாட்டை உருவாக்கிவந்த இந்தியா -

தற்போது தமிழினத்தின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்வதான சில ஏற்பாடுகளில் இறங்கியிருப்பதை அவதானிக்கமுடிகின்றது.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் பலவற்றுக்கும்- அது, அரசியல் ரீதியாக இருந்தால் என்ன, இராணுவ ரீதியாக இருந்தால் என்ன -

அவற்றுக்கு முட்டுக்கட்டைகள் போடுவதிலும், கபடத்தனம் நிறைந்த காட்டிக்கொடுப்புகளிலும் இந்தியத் தரப்பில் மிகுந்த ஈடுபாடு காட்டப்பட்டே வந்தது.

இந்தியா - தனது பிராந்திய நலன்களை காப்பதற்காக- ஈழத் தமிழினத்தை, அவர்களின் விடுதலைப் போராட்டத்தை, சுதந்திர வாழ்வை ஒரு பகடைக்காயாக்க விடுதலைப் புலிகள் என்றைக்கும் இணங்கியிராத சூழலில் - இந்தியத் தரப்பு, வன்மங்கலந்த பகைமை உணர்வைத்தான் விடுதலைப் புலிகள் மீது வைத்திருக்கின்றது.

விடுதலைப் புலிகள் போரியல் ரீதியாகவும் சரி, அரசியல் ரீதியாகவும் சரி - தமிழினத்தின் காவலர்களாக ஏக பிரதிநிதிகளாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதை - இந்தியாவின் ஆளும்வர்க்கம் தனக்கு ஏற்பட்டுள்ள இடைஞ்சலாகவே கருதியது/கருதிவருகின்றது.

தமிழ் மக்கள், விடுதலைப் புலிகள் மீது கொண்டுள்ள பாதுகாப்பு உணர்வும், நம்பிக்கையும் - இந்தியாவைப் பொறுத்தவரையில் வேப்பங்காயாகவே இருந்துவந்ததை- அது பல தடவைகளிலும் வெளிப்படையாக காட்டியிருக்கின்றது.

எந்தெந்தச் சந்தர்ப்பங்களில் தமிழினம் பலம் பெற்று வருகின்றதோ, தமது நியாயமான கோரிக்கைகளுக்கான ஆதரவைப் பெறுகின்றதோ - அப்போதெல்லாம், இந்திய தந்திரமான காய் நகர்த்தல்கள் மூலம் - அவ்வாறான சூழ்நிலையைச் சிதைப்பதில், சீரழிப்பதில் வெகு விழிப்பாகவே இருந்து வந்துள்ளது.

தமிழினத்தின் ஒற்றுமை - இலங்கையில் தனக்கான பூகோள நலன்களில், அரசியல் ஆதிபத்தியத்தில் தாக்கத்தைக் கொண்டுவந்துவிடும் என்பதற்காகக் காலத்துக்குக்காலம் பிரித்தாளும் தந்திரத்தை சிங்களத் தலைமைகளுக்கு நிகராக, ஏன் ஒருபடி கூடுதலாகக் கூட இந்தியா செய்து வந்திருப்பதை தமிழினம் மறந்துவிடமாட்டாது.

விடுதலைப் புலிகளுடன், இந்திய அமைதிப்படை வலிந்த யுத்தத்தை ஆரம்பித்ததன் பின்னர் - விடுதலைப் புலிகளுக்கு மாற்றான தமிழ்த் தலைமையை உருவாக்க அதி தீவிரமாகவே முயற்சிக்கின்றது. இந்த சூழ்ச்சியில்- இன்றும் இருக்கின்ற, அன்றும் இருந்த தமிழ்த் தலைவர்கள் சிலரும் பலியாகியிருந்ததை, எவரும் மறந்துவிட முடியாது.

ஆனால் - தமிழ் மக்களின் சுதந்திரத்தையும், சுயாதிபத்தியத்தையும் மீட்டெடுத்துத் தரக்கூடியவர்கள் விடுதலைப் புலிகள் என்பதில் - தமிழினம் கொண்டிருந்த அசையாத நம்பிக்கையும், உறுதியும் - இந்தியாவின் கனவில் மண்ணள்ளிப்போடச் செய்தன.

அன்றுதொட்டு - தனது வஞ்சகத்தனமான வலை விரிப்புக்குள் தமிழ்க் குழுக்களையும், அதன் தலைவர்களையும் வீழ்த்திவந்த இந்தியா - இன்று முக்கியமான வரலாற்றுக் கட்டத்தில், தனது மற்றுமொரு பாரிய நகர்வைத் தொடங்கியிருக்கிறது.

வரதராஜப்பெருமாளின் ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரிவினரை இந்திய உளவுத்துறை பயன்படுத்தி வருவதை 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' போன்ற இந்தியப் பத்திரிகைகளே பகிரங்கப்படுத்திவிட்ட நிலையில் -

தற்போது ஈ.பி.டி.பி.யினரை வைத்து அரசியல் நடாத்துவதற்கான களம் ஒன்றைத் தெரிவுசெய்வதில் இந்தியா இறங்கியிருப்பதாகவே தெரிகின்றது.

இதன் வெளிப்பாடாகவே - ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் இந்திய விஜயம் அமைந்திருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

அதேவேளை - தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலுள்ள கூட்டணியினரை அழைத்துப்பேசிய, இந்தியத் தூதுவர்- கூட்டமைப்பில் இருந்து பிரிந்து அவர்களை தனியாகச் செயற்படவும், குழப்பங்களை ஏற்படுத்தவும் அவர்களுடன் பேரம் பேசியதாக - கூட்டமைப்பின் முக்கியஸ்தர் ஒருவரே பகிரங்கமாகப் பேசியிருக்கிறார்.

கூட்டமைப்பினர் இந்த வலைக்குள் விழுவார்களோ, இல்லையோ - இந்தியா மற்றுமொரு தந்திர விளையாட்டில் அக்கறைகாட்டத் தொடங்கியிருப்பது மட்டும் நிதர்சனமாகியிருக்கிறது.

ஆனால் - தமிழினம் விழிப்பாக இருக்கும் இன்றைய வேளையில், விடுதலைப் புலிகளின் கரத்தைத் தமிழ்மக்கள் பலப்படுத்தி நிற்கும் நிலையில் - இந்திய ஆளும் வர்க்கத்தின் இந்த சூழ்ச்சிகள் மற்றுமொரு வரலாற்றுத் தோல்வியையே தழுவும் என்பது திண்ணமாகும்.

# கடற்படையின் இலத்திரனியல் பதிகருவியை கண்காணிப்புக்குழு கேட்பது முறையல்ல!

### புலிகள் கப்பல் மூழ்கடிப்பு விவகாரத்தில் கடற்படை எதிர்ப்பு

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் வைத்து, புலிகளின் கப்பல் இலங்கைக் கடற்படையினரால் தகர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவினர் கடைசியாக வெளியிட்டுள்ள அறிக்கையில் - கப்பல் தகர்ப்பின்போது, தகவல்கள் பதியப்பட்ட இலத்திரனியல் பதிவுக் கருவியைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரப்பட்டதற்கு, கடற்படை ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகக் கடற்படைத்தரப்பு கருத்துத் தெரிவிக்கும்போது, இலத்திரனியல் பதிவுசெய்யும் கருவியை ஒப்படைத்தால், அதன்மூலம் கடற்படையினரின் இரகசியங்கள் வெளியாகும் எனவும், இந்த நிலையில் இலத்திரனியல் கருவியை யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவினர் கோருவது முறையல்ல எனவும் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் தளபதி கேணல் கிட்டு வந்த கப்பல் தகர்க்கப்பட்ட சம்பவத்தில், அக்கப்பல் மாலுமிகள் மீதான விசாரணைகள் இந்திய நீதிமன்றத்தில் நடைபெற்றபோது, இலத்திரனியல் பதிவுக் கருவியை இந்தியப் படையினர் ஒப்படைக்கவேண்டும் எனக் கோரப்பட்டது. இந்திய நீதிமன்றம் அதனை நிராகரித்ததாகவும், நாட்டின் பாதுகாப்புக் கருதி, இலத்திரனியல் பெட்டியை வெளியடுவதை இந்திய நீதிமன்றம் நிராகரித்த நிலையில், இலங்கையில் யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு கடற்படைத்தரப்பிடம் இலத்திரனியல் பதிவுக்கருவியை ஒப்படைக்குமாறு கேட்பது முறையல்ல எனவும், கடற்படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# வெளிநாடுகளுக்கான மாணவர் சுற்றுலா; கல்வியமைச்சின் அனுமதி மிக அவசியம்!

### மீறினால் அதிபர்கள் மீது கடும் நடவடிக்கை

பாடசாலை மாணவர்களை - கல்வி அமைச்சின் முன் அனுமதியின்றி, வெளிநாட்டுப் பிரயாணங்களில் பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் ஈடுபடுத்துவதைக் கல்வி அமைச்சு தடைசெய்துள்ளது.

இது பற்றி கல்வி அமைச்சின் செயலாளர் வீ.கே. நாணயக்கார- சகல மாகாண, வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் சுற்றறிக்கைமூலம் அறிவித்துள்ளதுடன், நடைமுறையை மீறும் அதிபர்களுக்கெதிராக மிகக் கடுமையான நடவடிக்கையெடுக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளார்.

சுற்றரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பாடசாலைச் சங்கங்கள், தேசிய சங்கங்கள் என்பவற்றினால் ஒழுங்கு செய்யப்படும், பாடசாலைப் பிள்ளைகள் கலந்துகொள்ளும் வெளிநாட்டுப் பிரயாணங்களுக்கான செலவுகளைச் சம்பந்தப்பட்ட சங்கங்களே ஏற்கவேண்டும். இந்தக் குழுவினருடன் கல்வி அமைச்சைச் சேர்ந்த அதிகாரியொருவர் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும்.

பாடசாலைச் சங்கம், தேசிய சங்கம் அல்லாத வேறு சங்கங்கள், பாடசாலை மாணவர்களின் வெளிநாட்டுக்கான செலவுகளை உரிய சங்கம் பொறுப்பேற்பதுடன், அந்த இயக்கம் மாணவர்களைத் தெரிவு செய்தவிதம், அதன் நோக்கம் என்பவற்றை அறிக்கையாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த மாணவர்களை வெளிநாட்டுச் சுற்றுலாவில் ஈடுபடுத்துவதற்கான சம்மதத்தை, பாடசாலை அபிவிருத்திச் சங்க முகாமைத்துவ சபை வழங்கவேண்டும். இந்தச் சுற்றுலாவில் கல்வி அமைச்சு அதிகாரி கலந்துகொள்வதுடன், குறிப்பிட்ட சங்கத்தை கல்வி அமைச்சு அங்கீகரித்துள்ளமை பற்றிய கடிதத்தையும் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கவேண்டும்.

இவ்வாறு சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், எச்சந்தர்ப்பத்திலும் பாடசலை அதிபர் - கல்வி அமைச்சின் முறையான அனுமதியின்றி மாணவர்களை வெளிநாட்டுச் சுற்றுலாக்களில் ஈடுபடுத்தக்கூடாதென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# பழைய சிலிப்பர் கட்டைகளைக் கூட மாற்ற வழியின்றியிருக்கும் ரயில்வே!

### நிதிப்பற்றாக்குறையால் ஏற்பட்டுள்ள திண்டாட்டம்

இலங்கை ரயில்வே சேவை சந்தித்துவரும் கடுமையான நிதிப்பற்றாக்குறை காரணமாக - அது முக்கியமான திருத்தப் பணிகளைக்கூட, முன்னெடுக்க முடியாது திண்டாடுவதாகக் கூறப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு உட்பட நாடு பூராவும் உள்ள ரயில் பாதைகளை, மீளப்புனரமைப்பதற்கு 1.5 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக ரயில்வேத் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த பல ஆண்டுகளாக மாற்றப்படாதிருக்கும் சிலிப்பர் கட்டைகளைப் புதிதாக மாற்றுவதற்குக்கூட, தம்மால் முடியாதிருப்பதாக அவர் கூறினார்.

ரயில்வேத் திணைக்களத்தின் போதிய கவனிப்பு இல்லாததும், இந்த சிலிப்பர் கட்டைகள் பழுதடைவதற்குக் காரணம் என - அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

நாடுமுழுவதிலுமுள்ள 1035 கிலோமீற்றர் நீளமான ரயில் பாதைகளில் பல இடங்களிலும் பழுதுகள், பிரச்சினைகள் ஏறபட்டிருப்பதால் - 375 இடங்களில் வேகத்தடைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

ரயில் இன்ஜின்கள் யாவும் இன்னும் இரண்டு வருடங்களுக்குள் பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையிலேயே உள்ளன. இதைவிட 260 ரயில் பெட்டிகளும் உடனடியாகத் திருத்தப்பட வேண்டியுள்ளன.

ஆனால், இவற்றைச் செய்வதற்கு ரயில்வேக்குக் கிடைக்கும் வருமானம் போதுமானதல்ல என, ரயில்வே வட்டாரங்கள் கூறுகின்றன.

இதேவேளை - கடந்த சில வருடங்களில் நடைபெற்ற ரயில விபத்துக்களின் எண்ணிக்கை வருடம் ஒன்றுக்கு நூறை எட்டிவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

2000 ஆம் ஆண்டில் 107 ரயில் விபத்துக்களும், 2001 ஆம் ஆண்டில் 95 ரயில் விபத்துக்களும் ஏற்பட்டிருப்பதாகவும், ரயில்வே புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்கையில் - ரயில்வேத் திணைக்களத்தைத் தனியார்மயப்படுத்த முயற்சிகள் நடப்பதாகவும் - இந்தியக் கம்பனி ஒன்றுக்கு, ரயில்வே குத்தகைக்கு விடப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருப்பதும் தெரிந்ததே.

# கசிப்பின் போதையைக் கூட்ட மனிதமலமும் சேர்க்கப்படுகிறது!

### வெளியாகிறது திடுக்கிடும் தகவல்

மதுபானம் அருந்துபவர்களை அதிகமாகக் கொண்ட நாடுகளின் வரிசையில் - இலங்கை இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. நாட்டின் பொருளாதார வள அபிவிருத்திக்கு அதிகம் பங்காற்றக்கூடிய, 25 வயது முதல் 44 வயதுக்கு இடைப்பட்டவரகள் மதுபானம் அருந்துவதால், அவர்கள் சமூகச்சீர்கேடுகளுக்கு உட்படுத்தப்படுவதாக - ஸ்ரீ ஜயவர்த்தனபுர மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் டொக்டர் அனுலா விஜேசுந்தர தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு, சுகாதாரக் கல்விப் பணியகம் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் அதிகரித்துவரும் குற்றச்செயல்களுக்கு மதுபாவனையும் முக்கிய காரணமாக உள்ளதுடன், இலங்கையில் வறுமை மறறும் தற்கொலை அதிகரிப்புக்கும் மதுபாவனையும் பிரதான காரணமாகின்றது.

சாராயம் மட்டுமன்றி பியர், கசிப்பு என்பனவும் உடலுக்குக் கேடுவிளைவிக்கின்றன. அண்மையில் மேற்கொண்ட ஆய்வுகளின்படி, கசிப்பில் அதிக போதை கிடைக்கவேண்டும் என்பதற்காக, மனிதமலத்தையும் துணியால் கட்டிக் காய்ச்சும் நடைமுறையும் பின்பற்றப்படுவதாகத் தெரியவருவதாகவும் டொக்டர் அனுலா விஜேசுந்தர தெரிவித்தார்.

# விதம்விதமான வடிவங்களில் நடக்கும் கொழும்பு சோதனை நடவடிக்கைகள்!

(கொழும்பு)

கொழும்பிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் புதிய தேடுதல் வேட்டைகளை நடத்துவதற்கென அமைக்கப்பட்டுள்ள விசேட படையணிக்கு (**Special striking force unit**) - பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவே நேரடியாகப் பொறுப்பேற்றுள்ளார்.

இப்படையணி - போதைப்பொருள் கடத்தலும், பாதாள உலக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவரும் 28 குழுக்களைக் கண்டறிந்துள்ளதாகவும், இவர்களே கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் இடம்பெறும் பெரும்பாலான குற்றச்செயல்களுக்குப் பொறுப்பானவர்கள் எனவும், பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள், தனியே வீடுவீடாகச் சோதனைகளோடு மட்டும் நின்றுவிடாது - பல பிரிவுகளிலுமாகச் செயற்படுத்தப்பட ஆரம்பித்துள்ளன.

கொழும்பு மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையில்- நகர்ந்து செல்லும் ரோந்து அணி (**Mobile Patrols**), விசேட நடவடிக்கைப் பிரிவு (**Special operations unit**), மோட்டார் சைக்கிள் ரோந்து (**Motor cycle patrols**), பொலிஸ் கார் ரோந்து (**Police patrol car operations**), நகரும் வீதித்தடைகள் (**Mobile road blocks**) எனப் பலவாறான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருக்கினறன.

கொழும்பிலும் இந்த விசேட நடவடிக்கை தொடங்கியதன் பின்னர், 127 தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில், 2045 பேர் நேற்றுமுன்தினம் விசாரணைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# உரிமைகளைச் சலுகைகளாகக் கருதும் நிலை எமது சமூகத்தில் இன்று வேரூன்றிவிட்டது!



**ஈழத்து இலக்கியப் படைப்பாளருள் ஒருவரும், 'நான்' உளவியல் சஞ்சிகையின் மூத்த உறுப்பினரும், ஐந்து சிறுகதைத் தொகுதிகள், உளவியல் - கட்டுரை நூல்கள், கிறிஸ்தவ ஒலி நாடாக்களை வெளியிட்டவரும் 'தலைமைத்துவம்', பத்திரிகைத்துறை எனப் பயிற்சிப்பட்டறைகள் - கருத்தரங்குகள் மூலம் புதிய பல தலைமைகளை உருவாக்கிவருபவரும், 'கியூடெக்' உயிர்ப்பூட்டல் குழு இணைப்பாளரும், சமய சமூகப் பணியாளருமாகிய செ.ஜோசப் பாலாவை, விருந்தினர் பக்கத்தில் சந்திக்கின்றோம்.**

★மனித உரிமைகள் பற்றி அதிகம் பேசப்படுகிறது. இவை பற்றி உங்கள் கருத்தென்ன?

□ முதலில் - மனித உரிமைகள் என்றால் என்னவென்று மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவை பற்றிய தெளிவில்லாதபோது, உரிமைகளைச் சலுகைகளாகவும், சலுகைகளை உரிமைகளாகவும் மற்றவர்களிடம் எதிர்பார்க்கும் நிலைதான் மனிதஉரிமைகள் ஆகிவிடும். இவற்றை - படித்தவர்கள் மட்டத்திலும் நான் காண்கிறேன்.

சமாதானப் பேச்சுவார்த்தைச் சூழலில், எதனை அனுபவிக்கிறீர்கள் என்று பலரிடம் வினாவினேன். அவர்கள் கூறிய பதில் - சமாதானப் பேச்சுவார்த்தையின் பின்னர், பல சலுகைகள் கிடைத்திருப்பதாகவும், எங்கும் சென்றுவரக்கூடியதாக இருப்பதாகவும், எந்தப் பொருளையும் என்ன விலை கொடுத்தும் வாங்கக்கூடியதாக இருப்பதாகவும், சோதனைச்சாவடிகளில் இறங்கிச் செல்லாமல் போகுமளவிற்கு பல சலுகைகள் கிடைத்திருப்பதாகவும் கூறினர். அவர்களில் பெரும்பாலானோர் படித்தவர்களே. இவர்கள் மட்டில் உரிமைகளைச் சலுகைகளாக எண்ணிக்கொள்வதை எண்ணி வியந்தேன், வேதனைப்பட்டேன்.

இதனால்தான் மனித உரிமைகள் பற்றிய தெளிவு - எமது தேவையாக உள்ளது என்பதையும், அதற்கான விழிப்பூட்டல், பல மட்டத்திலும் செய்யப்படவேண்டும் என்பதையும், வலியுறுத்துகின்றேன்.

★மக்களுடன் அதிகம் ஈடுபாடு கொள்ள வைத்த சந்தர்ப்பங்கள் எவ்வாறு உங்கள் வளர்ச்சிக்குச் சாதகமாக அமைந்தன?

□ எனது சமூகப்பணிகளுக்கு, நல்ல வழிகாட்டிகளும், நல்ல நண்பர்களும் காரணமாக இருந்தார்கள். அத்தோடு, எழுத்துத் துறையிலும் ஈடுபாடு கொண்டதால், அதன்மூலம் என்னை அறியாதவர்களோடும்கூட தொடர்பாட முடிந்தது.

இதைவிட சிறுவர்கள் மட்டில் - போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் பராமரிக்கும் 'அன்பகம்' சிறுவர் இல்லத்தை, 1986 களில் சில நண்பர்களுடன் இணைந்து நடாத்தினோம். இவையெல்லாம் சமூகத் தொடர்புகளுக்குப் பக்கபலமாக இருந்தன.

இன்றும் இதற்கான சந்தர்ப்பம், 'கியூடெக்' இயக்குநர் வண.ஜெயக்குமார் அடிகளாரால் தரப்பட்டதால், யாழ். மாவட்ட உயிர்ப்பூட்டல் குழு இணைப்பாளராக இருந்து, சமூகத்தின் பாமர மக்களோடு அதிகமாகப் பணியாற்ற முடிகின்றது.

பாமர மக்களிடம் சென்று சேவையாற்றும்போது ஏற்படுகின்ற திருப்தி, வேறு எதிலும் பெறமுடியாததாகும். அடிமட்ட மக்களின் உயர்வில் காணும் வளர்ச்சியே நல்ல பணியாளனின் அறுவடையாகும். அதனை சுவைப்போர் அரிதாகவும், சுரண்டுவோர் அதிகமாகவும் உள்ள நிலை களையப்பட வேண்டும். நேரம், காலம், லாபம் பார்க்காது அர்ப்பணிப்புடன் உழைப்பவர்கள் - மக்களுடன் ஒன்றித்தவர்களாக, சமூகப் பணியாளர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

★இன்றைய நிலையில் - சமூகத்தில் அதிக பாதிப்பை எதிர்கொள்பவர்களாக யாரைக் கருதுகிறீர்கள்?

□ பாதிப்பு, எல்லோரிடமும் ஏதோ ஒரு விதத்தில் ஏற்பட்டிருகின்றது. போர் மறைந்தாலும் போரினால் ஏற்பட்ட வடுக்கள் மறையவில்லை. உளக் காயங்களாக அவை இன்று வெளிப்படுவதை, மருத்துவ நிலையங்களே சாட்சி பகரும். இதில் அதிகம் பாதிக்கப்பட்டிருப்போர் முதியவர்களும், சிறுவர்களுமே. புனர்வாழ்வு, புனரமைப்பு எல்லாம் - கட்டடங்களையும், இலக்கச் செலவீனங்களையும் சுற்றிநிற்கின்றதே தவிர, எம்மண்ணின் சிறுவர்களைப் பற்றியும், முதியவர்கள் பற்றியும் அக்கறை கொள்வோர் மிக அரிதாகவே காணப்படுகின்றனர்.




பெற்றோர் - பிள்ளைகளுடனனா உறவாடல், ஆசிரியர் - மாணவர்களுடனான உறவாடல், ஆற்றுப்படுத்துவதற்குரிய வாய்ப்புக்கள் இன்று போதுமானதாக இல்லை. இதில் - நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளும், பணத்தை மையப்படுத்திச் செயற்படுகின்றதே தவிர, அர்ப்பணம் என்பதன் அர்த்தம் புரியாது, பணத்தை மையப்படுத்தியதாக அவை மாறியது கவலைதரும் விடயமாகும்.

★ நீங்கள் ஒரு படைப்பாளர், பத்திரிகையாளர் என்ற மட்டில், தொடர்பூடகங்கள் மக்களை வழிப்படுத்துவதாக நினைக்கிறீர்களா?

□ அது, மக்கள் தேர்ந்தெடுப்பதைப் பொறுத்தே உள்ளது. தாமே தேர்ந்தெடுத்துப் படிப்பதிலும், எழுதுவதிலும் - பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் முன்னையகாலத்தில் பாரிய பங்களிப்பைச் செலுத்தியுள்ளன. இதற்கு, நூலகங்களின் பங்களிப்பும் மேலானது. இதில் தேர்ந்தெடுப்பது என்பது, அவர்கள் வளர்ச்சிக்கு முக்கியமானதாகும்.

ஆனால், இன்று தொடர்பூடகங்களின் பெரும்பகுதி, தொல்லைதரும் தொலைக்காட்சியாக மாறிவிட்டது.

இவை - மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதைவிட, தொலைக்காட்சி நிறுவனங்களின் தேர்வுகளுக்கு அடிமைப்பட்டவர்களாகவே மக்களை உருவாக்கிவிட்டன. வீட்டுக்குள்ளேயே வில்லங்கங்கள் தேடிவந்திருப்பது உணராது, கூடியிருந்து கும்மாளமாக மக்கள் சரணடைந்து வருகின்றனர்.

இதனால், அறிவை வளர்ப்பதற்கு - வாசிப்பு, எழுத்து, தேர்வு என்பன வழிப்படுத்துவதாக இல்லாது, தொடர்பூடகத்தில் தொலைக்காட்சிகள் தொல்லைக்காட்சிகளாக மாறிவிட்டன.

சந்திப்பு: ராதா வள்ளி

# கலையும் கூடும் சமாதான மேகங்கள்



பிரிட்டனில் சந்திக்கும் ரொனி பிளேயர், ரணில் விக்கிரமசிங்க.

இலங்கைக்கு உதவுவதற்கு முனனோடியாக வொஷிங்ரனில் கூட்டிய மாநாட்டில் - விடுதலைப் புலிகளை ஓரங்கட்டியபோது, சமாதான மேகம் இலேசாகக் கருமைகாணத் தொடங்கியது.



சந்திரிகா குமாரதுங்கா

எப்படியும் சமாதான வானம் வெளிக்கும். அதைச் சரிக்கட்டிவிடலாம் என்ற நம்பிக்கையில் வெளிநாட்டு வல்லரசு அதிபர்கள், அரசியல் வல்லுநர்கள், பொருளாதார நிபுணர்கள் மட்டுமல்லாது, உள்நாட்டில் - அதிமேதாவி எனச் சந்திரிகாவும், அவரது கட்சியினரும் கருதும் கதிர்காமரும் கூட, ரோக்கியோ மாநாட்டில் புலிகள் கலந்துகொள்ள வேண்டுமென்று - நயமாகவும், மிரட்டலாகவும் சொல்லிப் பார்த்தார்கள்.

இடைக்கால நிர்வாகசபைக் கோரிக்கையை எப்படித் தங்களுக்குச் சாதகமாக்கி, விடுதலைப் புலிகளை ஏய்க்காட்டலாம் என்பதில்தான், அரசதரப்பு முனைந்து கொண்டிருக்கிறது.

இடைக்கால நிர்வாக சபையோ, சமாதானப் பேச்சுவார்த்தையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வோ, எதுவானாலும் - விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையவேண்டும் என்பதில், அரசதரப்பு மட்டுமன்றி "சமாதானக்கொடி தூக்கும்" அன்பர்களும், ஆதரவாளர்களும்கூட மிக ஆர்வமாக இருக்கின்றனர்.

"குட்டக்குட்ட குனிகிறவனும் மடையன், குனியக்குனிய குட்டுறவனும் மடையன்" என்று தந்தை செல்வா அடிக்கடி கூறிவந்தபோதும், அவர் குட்டப்பட்டார்.

விடுதலைப் புலிகள் எப்போதும் நிமிர்ந்து குட்டுகிற நிலையில்தான் நிற்கிறார்கள். குனிந்து குட்டுவாங்கும் நிலையில் அவர்கள் இல்லை. இதை இன்று- ரணில் அரசும், சமாதான ஆதரவாளர்களும் உணர்ந்திருப்பர். ரோக்கியோ மாநாட்டுக்குப் போகாவிட்டால், புலிகளுக்குத்தான் பெரும நஷ்டம் ஏற்படும் என்று சொல்லிப்பார்த்த கதிர்காமரும்கூட, இன்று புலிகளைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கத்தான் செய்வார்.

அதேவேளை - வொஷிங்ரன் மாநாட்டில் ஆரம்பித்து, ரோக்கியோ மாநாட்டின் பின்னர், கருக்கட்டிப் பரவிய சமாதான மேகம் - பிரதமர் ரணில் லண்டன் சென்று எடுத்த முயற்சிகளின் விளைவாக ஒளிக்கீற்றுத் தோன்றி, சமாதான முயற்சியில் சிறிது வெளிச்சம் பரவ உதவியிருக்கிறது.

இதேசமயம், இடைக்கால நிர்வாகசபையோ, சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகளோ வெற்றி பெற்றுவிடக்கூடாது என்பதில் அம்மையாரும், அவரது சகபாடிகளும் அக்கறையுடன் செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றனர்.

அம்மையாரும், சகபாடிகளும் தங்கள் எதிர்ப்பு அரசியல் நடவடிக்கைகளை, இன்னமும் பழைய பாணியிலேயே தொடருவதுதான் பரிதாபம்.

"இடைக்கால நிர்வாகசபை விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்டால், அது அவர்களுக்குத் தமிழீழம் வழங்கியதாக அமைந்துவிடும்.

நாட்டைத் துண்டுபோட்டு, புலிகளுக்கு வழங்குவதற்குத்தான் ரணில் லண்டன் சென்று, பிரிட்டிஷ் பிரத

எஸ்.எம்.ஜி

மரைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்" என்று, எதிர்க்கட்சியினர் குரல் கொடுக்கின்றனர்.

இடைக்கால நிர்வாகசபை ஏற்படுவதை - உயிரைக் கொடுத்தாவது தடுப்போம் என்று முரசு கொட்டுகிறது ஜே.வி.பி.

இடைக்கால நிர்வாகசபை அமைப்பை எதிர்த்து - நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக, பொதுஜன ஐக்கிய முன்னணி மிரட்டுகிறது.

சிஹல உறுமய இடைக்கால நிர்வாகசபையை எதிர்த்து - நாடு முழுவதும் யாத்திரை போகப்போவதாகப் பயமுறுத்துகிறது.

1960 ஆம் ஆண்டில் மார்ச் மாதத்திலும், ஜுலை மாதத்திலும் நடந்த தேர்தல் காலத்தில் - சந்திரிகாவின் அப்பன் தொடங்கிய சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவர்களும், பின்னர் அம்மா சிறிமாவும்கூட, ஐக்கிய தேசியக்கட்சி - நாட்டைத் துண்டுபோட்டு - வடக்கையும், கிழக்கையும் செல்வநாயகத்துக்குத் தூக்கிக் கொடுக்கப்போவதாகப் பிரசாரம் செய்தனர்.

ஐக்கிய தேசியக்கட்சியும், அதன் அன்றைய தலைவர் டட்லியும் - பதிலுக்குச் சுதந்திரக்கட்சி நாட்டைப் பிரித்து, செல்வநாயகத்துக்கு வடக்கு-கிழக்கைத் தாரைவார்க்கப்போவதாகப் பிரசாரம் செய்ததையும் யாரும் மறந்துவிடவில்லை.

பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து, ஜே.ஆர்.ஜெயவர்த்தன 1957 ஆம் ஆண்டில் கண்டி யாத்திரை சென்றதும், இந்த ஒப்பந்தம் நாட்டைத்துண்டாக்கிவிடும் என்று சொல்லித்தான்.

நாட்டைப் பிரித்துவிடுவார்கள் என்று, தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் கூச்சல்போட்டு, தமிழ் மக்களை ஆயுதபலம் கொண்டு அடக்கி, அவர்களின் உரிமைகளைப் பறித்தெடுத்தனர்.

தமிழ்மக்களின் உரிமைகளைப் பறிப்பதில் - யார் சமர்த்தர்கள் என்பதை, அவர்கள் தேர்தல்களில் வெற்றியீட்டுவதன் மூலம் உறுதிப்படுத்தி வந்தனர்.

தமிழ்த் தலைவர்கள் காந்திய வழியில் சாத்வீகப் போராட்டங்கள் நடத்திவந்ததை, சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களின் பலவீனமாகக் கருதினர். சாத்வீகப் போராட்டத்தை வெள்ளைக்காரன் வேறுவிதமாகப் பயன்படுத்தினான். ஆனால், சிங்களத் தலைமை, தமிழினத்தை அழித்து ஒழித்துவிடப் பயன்படுத்தியது.

சாத்வீகப் போராட்ட காலத்தில் சிங்களப் பேரினவாதிகளும், சிங்கள ஆட்சியாளர்களும் கைக்கொண்ட முறைகளையே, இன்றும் சிங்களப் பேரினவாதிகள் பயன்படுத்தலாம் என்று கருதுகின்றனர்.

தமிழ்மக்களை இனியும் பகடைக் காய்களாகப் பயன்படுத்தமுடியாது என்பதை, விடுதலைப் புலிகள் பல வழிகளிலும் சிங்களத் தலைமைகளுக்கும், சிங்களப் பேரினவாதிகளுக்கும் உணர்த்திவிட்டனர்.

தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்று உலகம் முழுவதும் பிரசாரம் செய்து, அதில் ஓரளவு வெற்றியும் கண்டனர்.

ஆனால், இன்று - பயங்கரவாதப் பூச்சாண்டி இனியும் எடுபடாது என்பதை உணர்ந்துகொண்ட சிங்கள ஆட்சியாளர்கள், தமது காய்களை வேறுவிதத்தில் நகர்த்தி, விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களைவதற்கு முயற்சி செய்கின்றனர்.

தமிழ்மக்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கு, உலக நாடுகளிடம் இருந்து உதவி பெறுவதற்கான முயற்சிகளில் தாம் ஈடுபடுவதாகக் காட்டிக்கொண்டு, சீரழிந்துபோன தமது பொருளாதாரத்தை நிமிர்த்தும் அதேவேளை, வெளிநாட்டுப் பொருளாதார உதவியைக் காரணம் காட்டி, விடுதலைப் புலிகளை விலைக்கு வாங்கிவிடலாம் எனக் கனவு காண்கின்றனர்.

இதுவும் விடுதலைப்புலிகளிடம் எடுபடவில்லை.

இதேசமயம், சந்திரிகா அம்மையார், தாம் மீண்டும் சகல அதிகாரங்களையும் பயன்படுத்தக்கூடியதாக, தமது கட்சியை மீண்டும் ஆட்சி பீடத்துக்குக் கொண்டுவருவதற்குப் படாதபாடுபடுகின்றார்.

சமாதானம் பற்றி, அம்மையார் இடையிடையே பேசினாலும், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு- அந்நியரின் உதவியைப் பெறுவதற்குக்கூடத் தயாராக இருக்கிறார் என்பது, அவரது நடவடிக்கைகளில் தெளிவாகத் தெரிகிறது.

கடலில் கடற்படையினின தாக்குதல்களுக்கு - அம்மையாரே பொறுப்பு எனபது - அவரது செயலகத்தின் சில அறிக்கைகளே சான்றாக அமைகிறது. அம்மையாரின் கட்டளைகளின் பேரிலேயே, கடற்படையின் தாக்குதல்களும் நிகழ்ந்திருப்பதாக அந்த அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

(தொடரும்)



பெத்தலகேமில் - பலஸ்தீனப் பொலீஸார் தீவிர பயிற்சிகளைப் பெற ஆரம்பித்துள்ளனர். இஸ்ரேலியப் படையினர் காஸாப் பகுதிகளை விட்டு விலகியதைத் தொடர்ந்து - அப்பகுதிகளுக்கான பாதுகாப்புப் பொறுப்பினை, பலஸ்தீனப் பொலீஸாரே ஏற்று வருகின்றனர்.

# வீரப்பனைத் தேடுவது நேரம் வீணாகும் செயல்

## கர்நாடக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி விசனம்


"சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனைத் தேடும் 15 வருடகால முயற்சியை, பாதுகாப்புப் படைகள் இனிக் கைவிடவேண்டியதுதான். இது - நேரத்தை வீணாக்கும் முயற்சியாகவே இதுவரை இருந்திருக்கின்றது" என, கர்நாடகாவின் மூத்த பொலிஸ் அதிகாரியான எச்ரி சக்லியனா தெரிவித்துள்ளார்.

சத்தியமங்கலம் காட்டுப்பகுதியிலிருந்து வீரப்பனை ஒருபோதும் பிடிக்கமுடியாது என, ஓய்வுபெற்றுச் செல்லும் அந்த அதிகாரி தெரிவித்தார். வீரப்பனைக் கைதுசெய்ய கர்நாடக அரசு அமைத்த சிறப்பு அதிரடிப்படையின் அதிகாரியாக, இவர் நீண்டகாலம் பதவிவகித்தவர்.

"தேடும் முயற்சியைக் கைவிட்டு வீரப்பனைச் சரணடையுமாறு கோரும் நல்லெண்ண முயற்சிகளே தேவையாகவுள்ளது.

காட்டுப் பிராணியாகவே உள்ள வீரப்பனுக்கு - எங்கே ஒளிவது, எங்கே வெளிவருவது என்பதெல்லாம் அத்துப்படி" எனவும் அவர் தெரிவித்தார்.

நூற்றுக்கும் மேற்பட்ட கொலைகள், சந்தனமரக் கடத்தல், யானைத் தந்தக் கடத்தல் போன்ற குற்றச்சாட்டுக்களுக்காக கர்நாடக, தமிழ்நாட்டு அரசுகளினால் வீரப்பன் தேடப்பட்டு வருவது தெரிந்ததே.



# அல்ஜீரிய ராணுவத்தின் சரக்கு விமானம் குடியிருப்பு மீது வீழ்ந்து நொருங்கியது!

(அல்ஜியர்ஸ்)

அல்ஜீரிய இராணுவ சரக்கு விமானம் ஒன்று, தலைநகர் அல்ஜியர்ஸின் குடியிருப்புப் பகுதி ஒன்றினுள் வீழ்ந்து நொருங்கியதில், குறைந்தது 12 பேர் பலியாகினர்.

நேற்றுமுன்தினம் - அல்ஜீரிய இராணுவ விமானத்தளம் ஒன்றிலிருந்து புறப்பட்ட ஹேர்குலிஸ் ரக சரக்கு விமானம், கிளம்பிய சில நிமிடங்களிலேயே, குடியிருப்பு ஒன்றின் மீது வீழ்ந்து நொருங்கியது.

விமானம் புறப்பட்டு சிறிது நேரத்தில் - அதன் ஒருபக்க இயந்திரம் தீப்பற்றியதாக, விபத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். இறந்தவர்களில் நால்வர் விமானத்திலிருந்தவர்களாவர். விமானம் வீழ்ந்ததில், இடிந்து நொருங்கிய கட்டடங்களினுள் மேலும் பலர் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொழில்நுட்பக் கோளாறே விபத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. இறந்த பொதுமக்களில் சிலர், விளையாட்டு மைதானம் ஒன்றில் உதைபந்தாட்டத்தில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் எனவும் கூறப்படுகிறது.



# யூனிற்றா கிளர்ச்சிக் குழுவுக்கு புதிய தலைவர் தெரிவானார்!




அங்கோலாவின் முன்னாள் கிளர்ச்சிக் குழுவான யூனிற்றா அமைப்பு, புதிய தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்துள்ளது. குழுவின் ஸ்தாபகரான ஜொனாஸ் சவிம்பிக்குப் பதிலாகப் புதியவர் பதவியேற்பார்.

யூனிற்றாவின் முன்னாள் இராஜிகப் பிரதிநிதி இசாயஸ் சமாக்குவா புதிய தலைவராகப் பதவி ஏற்கிறார். இவருக்கு மேற்குலகின் ஆதரவும் ஓரளவுக்குண்டு.

சமாக்குவாவின் தெரிவுடன் கிளர்ச்சிப் படையாக இருந்த யூனிற்றா அமைப்பு, அரசியல் கட்சியாக மாறுகின்றது.

இவ்வமைப்பின் ஸ்தாபகரான 57 வயதான சவிம்பி, கடந்த ஆண்டு அரச படைகளுடனான மோதலின்போது கொல்லப்பட்டார். இவரைத் தொடர்ந்து இடைக்காலத் தலைவராக போலோ லுகாம்பா பதவிவகித்து வந்தார்.



இங்கிலாந்தில் நடந்துவரும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில், நம்பிக்கை நட்சத்திரமாக மிளிரும் செரீனா வில்லியம்ஸ் நேற்றும் தனது தொடர் வெற்றியொன்றைப் பெற்றுக் கொண்டார்.

# அமெரிக்கப் படைகளின் மீது பக்தாத்தில் தொடர் தாக்குதல்!

## பிரதான பள்ளிவாசலில் குண்டுவெடிப்பு

ஈராக்கின் ஃபாலுஜா நகரிலுள்ள, பிரதான பள்ளிவாசலில் நேற்று இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில், நான்கு ஈராக்கியப் பொதுமக்கள் பலியாகினர். அதேசமயம், நேற்று - பக்தாத்தில் அமெரிக்க இராணுவ வாகனம் ஒன்றினருகே கார் குண்டுவெடிப்பு மற்றும் அமெரிக்கப் படையினரின் ரோந்து அணி மீதான கைக் குண்டுவீச்சுப் போன்ற தாக்குதல்களும் நடைபெற்றுள்ளன.

பள்ளிவாசல் மீதான தாக்குதலுக்கு அமெரிக்கர்களே பொறுப்பு என, உள்ளூர் வாசிகள் குற்றஞ்சாட்டும் அதேவேளை, பள்ளிவாசலில் மறைத்துவைக்கப்பட்ட குண்டே வெடித்ததாக அமெரிக்கப் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க இராணுவ வாகனம் மீதான கார்க்குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்த நான்கு படையினர், சேதமுற்ற இராணுவ வாகனத்தினுள் இருந்து இழுத்தெடுக்கப்பட்டதை நேரில் கண்டதாக உள்ளூர் வாசிகள் தெரிவித்தனர்.

இதேசமயம், பக்தாத்திலிருந்து தெற்காகச் செல்லும் பிரதான வீதியில் சென்ற அமெரிக்கப் படைகளின் இரண்டு கவசவாகனங்கள் மீது, ரொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டதில் ஒரு கவசவாகனம் தீப்பிடித்து எரிந்ததாகவும், மற்றைய துருப்புக்காவி கவசவாகனம் வீதியை விட்டு குப்புறக் கவிழ்ந்ததாகவும் சம்பவத்தை நேரில் கண்ட ஏ.எப்.பி. புகைப்படப்பிடிப்பாளர் தெரிவித்தார்.



குண்டுவெடிப்பில் சேதமடைந்த கார்

# இஸ்ரேல் படையினரால் பலஸ்தீனர் சுட்டுக்கொலை

(காஸா)

மேற்குக்கரையில், இஸ்ரேல் சோதனைச்சாவடி மீது தாக்குதல் நடத்த முயன்ற பலஸ்தீன ஆயுததாரி ஒருவரை, இஸ்ரேல் படையின் சுட்டுக் கொன்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிறு, பிரதான போராளிக்குழு போர்நிறுத்தம் அறிவித்ததன் பின்னர் நடைபெறும் இரண்டாவது சம்பவமாக, நேற்றைய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த திங்களன்று, பல்கேரியாவைச் சேர்ந்த வீதித் தொழிலாளி ஒருவர், செனின் நகர் அருகே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத 'அல - அக்சா தியாகிகள் படை' என்ற அமைப்பினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோனுக்கும் பலஸ்தீனப் பிரதமர் மஹ்மூட் அப்பாஸுக்கும் இடையில், நேற்று ஜெருசலேமில் நடைபெற்ற சந்திப்புக்கு முன்பாக இத்துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

உலகவலம்



ஹைதராபாத்தில் ஜெகநாதர் ஆலய உற்சவத்தில், இந்துமத பக்தர் ஒருவர் சைக்கிளொன்றைத் தனது பற்களால் கவ்விப்பிடித்துத் தூக்கிச் சாகசம் காட்டுகிறார். சுற்றிவர பக்தர்கள் வெள்ளம்.

### ஐ.நா. கூட்டம் ஒத்திவைப்பு

லைபீரியாவில் நடைபெறும் உள்நாட்டுப் போரை நிறுத்த, சர்வதேச அமைதிப்படையை அனுப்புவது குறித்து ஆராயக் கூட்டப்பட்ட ஐ.நா. பாதுகாப்புச்சபைக் கூட்டம், முடிவுகள் ஏதுமின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

### ஈராக் அரசியல் யாப்புக்கு ஷியா தலைவர் எதிர்ப்பு

ஈராக்கிற்கான புதிய அரசியல் யாப்பை வரைய, ஈராக்கியர்கள் சிலரைக்கொண்ட குழுவொன்றை அமைக்கும் அமெரிக்க முயற்சிக்கு, ஈராக்கின் மிகமூத்த ஷியா மதகுரு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஈராக்கியப் பிரதிநிதிகளை ஈராக்கியரே தேர்தல் மூலம் தெரிவு செய்ய வேண்டுமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# குரங்குப்பாஞ்சானில் ஊடுருவல்; கண்காணிப்புக் குழுவிடம் விசனம்!

## காட்டுக்குள் சென்ற நால்வரை காணவில்லை எனப் புகார்!

தேன் எடுப்பதற்காக, வவுனியா காட்டுப்பகுதிக்குச் சென்ற நான்கு இளைஞர்களைக் காணவில்லை என்று - மனித உரிமைகள் ஆணைக குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

த.சரவணபவனேஸ்வரன் (வயது 21), ச.செந்தூர்ச்செல்வன் (வயது 23) ஆகியோர் உட்பட நான்குபேர், சில நாட்களின் முன்பு தேன் எடுப்பதற்காகச் சென்றதாகவும், இது வரை அவர்கள் வீடு திரும்பவில்லையென்றும் மேற்படி முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## பாலாவைச் சந்திக்க...

ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்துடன், தமிழ்ச் செல்வன் விரிவான முறையில் மந்திராலோசனை நடாத்தவிருக்கிறார் என்றும் -

இச்சந்திப்பின்போது, வடக்கு - கிழக்கில் அமைக்கப்படவிருக்கும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கு இருக்கவேண்டிய, அதிகார வரம்புகள் குறித்துக் கலந்துரையாடப்படவிருப்பதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன் - ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை அரசு ஏற்படுத்துவதற்கு முன்வரும் பட்சத்தில், சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்தும் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும், அரசியற் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் விரிவாக ஆராயவுள்ளனர் என்றும்- இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிட்டுள்ளன.

இதேவேளை - ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷியும் மிகவிரைவில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இதற்காக - ஒரு சில தினங்களில், யசுசி அகாஷி லண்டனுக்குச் செல்லவிருப்பதாக ஜப்பானிய தூதரகத்திலிருந்து தெரியவந்தது.

இடைநிறுத்தப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்களை, மீண்டும் ஆரம்பிப்பதற்கான முன்முயற்சியாகவே மேற்படி சந்திப்பு நடைபெறவுள்ளதாக கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதரக வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டுள்ளன. (க,01)

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1525 திகதி: 01.07.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| S | 4 | 0 | 6 | 9 | 0 | 2 |

## மரண அறிவித்தல்



## மார்க்கண்டு கனகரத்தினம்
### (கனகரத்தினம் சாத்திரியார்)
**- கேணியடி, கொக்குவில் மேற்கு -**

இணுவில் - சிவகாமி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கேணியடி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் சாத்திரியார் நேற்று (01-07-2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற மார்க்கண்டு - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கண்மணி (பரமேஸ்வரி)யின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சங்கரலிங்கம், சிவராசா (இந்தியா), காலஞ்சென்ற கைலாயன், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசுப்பிரமணியம் (கொழும்பு), ஜெயபாலு (வவுனியா), சந்திராதேவி, இந்திராதேவி, முருகையா (கிளிநொச்சி), சாரதாதேவி (தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனை), ஸ்ரீகுமார் (கனடா), சரோஜினிதேவி (லண்டன்) ஆகி யோரின் அன்புத் தந்தையும், கனகேஸ்வரி, வரதலட்சுமி, இராசதுரை, சிவபாலு, பிறேமா (கிளிநொச்சி), அமரன், கௌரி (கனடா), சுதாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மதியழகன் (மாங்குளம்), அன்பழகன், மகாலட்சுமி, தமிழழகன், ஜெயந்தினி (கனடா), ஜெயசுதா (வவுனியா), ஜெயசதா, ஜெயமாலா, ஜெயலட்சுமி, ஜெயராஜ், பிரதீபன், ஜெகதீபன், பார்த்தீபன், ரதீபன், பிருந்தா, ராஜினி, ராஜ்குமார், ரகுமார் (பிரான்ஸ்), ரவிக்குமார், ராஜிகா, ரதீஸ்குமார், சங்கீதா, சர்மிலன், சாருஜன், சாரங்கன், சஞ்சயன் (கனடா), கிரிசாந் (கனடா), விருசிகா (கனடா), மிதுசா (கனடா), விருசன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், மதுசா, விதுசா, விதுசன், நிதுசன், கனிதன் (கனடா), கனிசா (கனடா), கஜானன் (கனடா), கீர்த்தன், நிருசிகா, சிவானா, ஜென்சிகா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-07-2003) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கேணியடி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

தகவல்
க.கண்மணி
(பரமேஸ்வரி - மனைவி)

(சி-1150)

தமது பூரண கட்டுப்பாட்டிலுள்ள திருகோணமலையின் குரங்குப் பாஞ்சான் பகுதியினுள் படையினர் நுழைந்தால், பாரிய விளைவை சந்திக்கவேண்டிவருமாம் என - விடுதலைப் புலிகள் நேற்று எச்சரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக சில தினங்களுக்கு முன் - இப்பகுதிக்குள் படையினர் ஊடுருவ முயன்றதாக, கண்காணிப்புக்குழுவிடம் புலிகளின் திருமலை அரசியல் பிரிவின் புகார் செய்திருந்தனர். இதேவேளை - கிண்ணியா பிரிவிலுள்ள இப்பகுதிக்கு நேற்று மதியம் கண்காணிப்புக் குழுவினர் நேரில் சென்றனர்.

கண்காணிப்புக்குழுவிடம் கருத்துத் தெரிவித்த விடுதலைப் புலிகள் - கோபாலபுரத்தில் கடற்படையினர் மீண்டும் முகாம் அமைப்பதன் மூலம் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறியுள்ளனர். மற்றையதரப்பை உடன்படிக்கையை பின்பற்றுமாறு கேட்கமுன்னர் - கடற்படையினர் கோபாலபுரம் படைமுகாமை அகற்ற, கண்காணிப்புக்குழு ஆவன செய்ய வேண்டும் என குறிப்பிட்டுள்ளனர்.

## 'விடுதலைப் புலிகள்' வெளிவருகிறது

"போர்நிறுத்த ஒப்பந்த மீறல்கள் பேச்சைப் பின்நோக்கி இழுக்கும்" என்ற முகப்புச் செய்தியுடன் - தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான, 'விடுதலைப் புலிகள்' ஏடு இன்று வெளிவருகின்றது.

"பேச்சை நெருக்கடி நிலைக்குள் அரசு விரும்பித் தள்ளுகிறதா?" என்று வினா எழுப்பும் ஆசிரியர் தலையங்கத்துடன் வெளிவரும் இவ் ஏட்டில் - க.வே.பாலகுமாரன் எழுதிய "வரலாற்றின் இனிய பழிவாங்கல்", "சமாதானம், ஏமாற்றப்படுவதில் மேற்குலகும் பலியிடப்படுவதில் தமிழர் மட்டும்தான்" போன்ற அரசியல் கட்டுரைகளும், கலாநிதி சோமாஸ்கந்தன் எழுதிய "இராசதந்திரமும் கற்கவேண்டிய பாடமும்" மற்றும் "வெகுதொலைவில் இருக்கிறது யுத்தத்திற்குத் திரும்பவியலாத கட்டம்", "தமிழரின் சமூகச் சீரழிப்பிற்கு சிங்களப்படைகள் எத்தனிப்பு", "சமாதான காலத்துக் குடியேற்றங்கள்" போன்ற இன்னும் பல கட்டுரைகளும் - உலைக்களம், வழித்தடம் போன்ற வழமையான அம்சங்களையும் தாங்கி இந்த ஏடு வெளிவருகினறது. இது, 'விடுதலைப்புலிகள்' ஏட்டின் வைகாசி-ஆனி மாதங்களுக்குரிய, 109 ஆவது குரலாகும்.

## வைத்தியசாலை சிற்றூழியர்களின் லீவுகள் ரத்து

அரசாங்க வைத்தியசாலைகளில் பணியாற்றும் சகல சிற்றூழியர்களுக்குமான அனைத்து லீவுகளும் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடமைக்கு வராத ஊழியர்கள், பதவியை விட்டு விலகியதாகக் கருதப்படுவார்கள். சுகாதார அமைச்சின் செயலாளர் ரெஜி பெரேரா, இந்த உத்தரவைக் கடுமையாக அமுல் செய்யும்படி பணித்துள்ளார்.

வைத்தியசாலைச் சிற்றூழியர்கள், நேற்று முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிந்துனுவெவ படுகொலை...

முறையில் இடம்பெற்று வந்தது.

இந்த மூன்று நீதிபதிகளே, நேற்று செவ்வாய்க்கிழமை எதிரிகளான ஐவருக்கும் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தனர்.

புனர்வாழ்வு முகாம் தாக்குதல் தொடர்பில் - 41 பேருக்கு எதிராகச் சட்டமா அதிபர் 83 குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வழக்குத் தாக்கல் செய்திருந்தார். வழக்கு விசாரணையின்போது போதியளவு சாட்சியங்கள் இல்லை என தெரிவித்து, 23 பேரை நீதிமன்றம் விடுதலை செய்திருந்தது. ஏனைய 18 எதிரிகளுக்கு எதிராகவே வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது.

இந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்படுவதையடுத்து, நேற்று எதிரிகள் 18 பேரும் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர். 18 பேரில் ஐந்து எதிரிகளைத்தவிர, ஏனைய அனைவரையும் சகல குற்றச்சாட்டுக்களிலும் நிரபராதிகள் எனத் தெரிவித்து நீதிமன்றம் விடுதலை செய்தது.

வழக்கில் எம்.ஏ.சமீ, சேமபால திசநாயக்க, ராஜபக்ஷ பிரேமானந், சேன கஜம்பதி கருணாசேன, ரிரோன வஜிர ரட்ணாயக்க ஆகியோர் குற்றவாளிகளாகக் காணப்படுவதால் மரணதண்டனையை வழங்குவதாக ட்ரயல் அட்பார் நீதிமன்றின் தலைமை நீதிபதி சரத் அம்பேபிட்டிய தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

மரணதண்டனை வழங்கப்பட்டவர்களில் சேன கஜம்பதி கருணாசேன, சம்பவம் நடைபெற்ற வேளையில் - பண்டாரவளை பொலிஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்ரராகக் கடமையாற்றிய பொலிஸ் அதிகாரியாவார். ரிரோன் வஜிர ரட்ணாயக்க, தியத்தலாவை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியவராவர்.

ஏனைய மூன்று பேரும் பிந்துனுவெவ கிராமத்தவர்களாவர்.

நீதிபதி சரத் அம்பேபிட்டிய தனது தீர்ப்பில் பின்வருமாறு குறிப்பிட்டார்,

புனர்வாழ்வு முகாம் தாக்கப்பட்ட சமயம், பொலிஸார் அங்கு நின்றுள்ளனர். ஆனால், சம்பவத்தைத் தடுக்க முற்படவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களில் இருந்து அது நிரூபணமாகின்றது.

தாக்குதலைப் பொலிஸார் தடுக்காமை, குற்றத்திற்குப் பொலிஸார் ஆதரவளித்ததாகவே கருதவேண்டியுள்ளது. சம்பவம் நடைபெற்றதினம் காலை 6.30 மணியளவில் பெருமளவு பொலிஸார் ஆயுதங்களுடன் அங்கு சென்றுள்ளனர். ஆனால், தாக்குதலைத் தடுக்கவில்லை. பொலிஸார் தமது கடமையினைச் சரிவரச் செய்யவில்லை. இது சட்டத்துக்கு முரணானதாகும்.

சம்பவத்தையடுத்தும் அங்கு நின்ற பொலிஸார் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களைக் கைது செய்யவில்லை. சாட்சிகளின்படி பொலிஸார் ஏ.கே 47 ரகத் துப்பாக்கி, பிஸ்ரல், கண்ணீர் புகைக்குண்டுகள் என்பவற்றை எடுத்துச்சென்றுள்ளனர். ஆனால் அவர்களைத் தடுக்கவில்லை.

தம்மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும், பாதிக்கப்பட்ட இளைஞர்கள் தமது சாட்சியத்தில் கூறியுள்ளனர். பொலிஸாரான எதிரிகள் - முகாமின் பிரதான வாயிலுக்கு அருகில் நின்றுள்ளனர். இவர்கள் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டுள்ளமை நிரூபணமாகியுள்ளது. அதேபோல் ஏனைய எதிரிகளும் சம்பவத்தின்போது அவ்விடத்தில் நின்றுள்ளனர். இவர்களில் ஒரு எதிரி காயமடைந்தும் உள்ளார்.

இவர்கள் ஐவரும் குற்றமிழைத்துள்ளனர் என - இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. குற்றவாளிகளாகக் காணப்படும் இவர்கள் ஐவருக்கும் மரணதண்டனை விதிக்கின்றேன். எதிரிகள் ஐவரும் விரும்பினால் ஜனாதிபதியிடம் கருணைமனு சமர்ப்பிக்க முடியும் எனக் கூறினார்.

அழகிய கூந்தலின் ரகசியம்




பக்க விளைவு அற்றது

பயோட்டின் H உடன் இயற்கையான விட்டமின் E சேர்க்கப்பட்டு தற்போது பயோட்டினெக்ஸ் E என்ற பெயரில் அறிமுகமாகிறது.

(சி-1142)

பயோட்டினெக்ஸ் -E

எது உங்கள் பிரச்சினை

- தலைமயிர் உதிர்கிறதா
- தலைமயிர் வளர்ச்சியின்மையா
- தலைமயிர் நுனி வெடிப்பா
- வலுவிழந்த தலைமயிரா
- வறண்ட சருமமா
- தோலில் சுருக்கம் விழுந்து வயதான தோற்றமா
- சரும நோய்களா
- உடைந்த ஒழுங்கற்ற நகங்களா

?



பயோட்டினுடன் விட்டமின் - E யும் சேர்ந்துள்ளதால் சிறந்த பயன் கிடைக்கும்

இவ்வனைத்துப் பிரச்சினைகளுக்கும் உடன் நிவாரணி விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட

BIOTINEX -E

பாவனை முறை
தினம் 2 கப்சியூல்ஸ் 3 மாத காலத்திற்கு பாவிக்கவும்.

இயற்கையான பயோட்டினெக்ஸ் -E தெற்காசிய மக்களுக்கென பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

யாழ். முகவர்: ஜெகன் பார்மசி — ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 021-2223191

வன்னி முகவர்: அகிலன்ஸ் பார்மசி — பிள்ளையார் மருந்தகம், கிளிநொச்சி.

மற்றும் நாடளாவிய ரீதியில் அனைத்து முன்னணி பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Marketed By:
Arkem Colombo
Tel: 470290, 075-344436, E.mail - arkem@sltnet.lk

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.